தெய்வத் தமிழ் வாசகம்

நான்காம் வகுப்பு



...டேசன் அண்டு கம்பெனி,
...ார்கெட், சென்னை-3

தெய்வத் தமிழ் வாசகம்

நான்காம் புத்தகம்

நான்காம் வகுப்பு

ஆசிரியர் :
வித்துவான் ஐ. நடேசப் பிள்ளை
பொன்னேரி

திருத்தியமைத்தவர் :
வித்துவான். இராஜ. சிவ. சாம்பசிவ சர்மா
தமிழ் ஆசிரியர்
சென்னைக் கிறிஸ்தியன் காலேஜ் ஸ்கூல்
சேத்துப்பட்டு, சென்னை—10.

வெளியிடுவோர் :
V. C. வேங்கடேசன் கம்பெனி
மூர்மார்கேட்டு,
சென்னை—3.

 1954 [அணா 8

First Edition, 1939
Twelfth Revised Edition, 1954

Printed at Vinodan Press, 33, Jones Street, Madras-1.

முன்னுரை

தெய்வத் தமிழ் வாசகம் என்னும் இப்பாட புத்தக வரிசை கல்வி இலாக்கா அதிகாரிகளால் 1939ல் புதிதாக அமைக்கப்பட்ட ஆரம்பப் பாடசாலைப் பாடத் திட்ட முறையை முழுதும் பின்பற்றி எழுதப்பட்டிருக்கின்றது. இது நான்காம் வகுப்புச் சிறுவர்கட்குரிய நான்காம் புத்தகமாகும்.

இந்நான்காம் புத்தகம் மாணவர்களின் பருவத்திற்கேற்றவாறு தெரிந்த, பேச்சில் உபயோகப்படுகிற மொழிகளைக் கற்பிக்கக் கருவியாக அமைக்கப்பட்டிருக்கிறது. இப்புத்தகம் படித்து முடித்த மாணவன் 700 புதிய மொழிகளையும் அவைகளடங்கிய சிறு வாக்கியங்களையும் பாடங்களின் மூலமாயும் சம்பாஷணை மூலமாயும் எழுதவும் படிக்கவும் கற்றவனாவான்.

இப்புத்தகத்தைக் கண்ணுறுவோர், இது பள்ளியாசிரியர்கட்கும், மாணவர்கட்கும் பெரிதும் இன்றியமையாததாயிருக்குமென்பதைச் செவ்விதின் உணர்வார்கள். ஆகவே, கல்வியதிகாரிகளும், பாடசாலைத் தலைவர்களும், ஆசிரியர்களும் இதை ஆதரித்து எனக்குப் பின்னும் ஊக்கம் அளிப்பார்களென நம்புகின்றேன்.

எல்லாம் வல்ல இறைவனுடைய இணையடிகட்கு இவைகளை அருச்சிக்கும் என் கடன் பணி செய்து கிடப்பதே.

பொன்னேரி,
25—6—'39

ஐ. நடேசன்,
தமிழாசிரியன்.

பொருளடக்கம்

செய்யுட்பாடம்

தெய்வத் தமிழ் வாசகம்

நான்காம் வகுப்பு



1. ‘நல்லது சொல்வேன்.’

(முரசுப் பாட்டு)

ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன் ;
சீருக்கெல் லாம்முத லாகும்—ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும். 1

சாதிக் கொடுமைகள் வேண்டா—அன்பு
தன்னிற் செழித்திடும் வையம்;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம். 2

யாரும் பணிந்திடும் தெய்வம்—பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்;
பாருக்குள் ளேதெய்வம் ஒன்று—இதில்
பற்பல சண்டைகள் வேண்டா. 3

அன்பென்று கொட்டு முரசே!—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்;
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால். 4

—சி. சு. பாரதியார்.

அருஞ்சொற்கள்:

துணை	**ஆதரவு**	**பணிந்திடும்**	**நிகர்**
கொடுமை	**மாண்புற**	**பார்**	**முரசு**

குறிப்புரை:

1. வையம் - பூமி. மாண்புற-பெருமை பொருந்த.
2. பார் - பூமி. 3. நிகர் - ஒப்பு.

பயிற்சி:

1. எவை வேண்டா? 2. எதனுல் உலகம் செழிக்கும்? 3. பெருமை பெற என்ன செய்ய வேண்டும்? 4. தெய்வம் எத்தகையது? 5. எப்பொழுது இன்பம் பெருகும்? 6. இப்பாடல்களின் கருத்தைத் தெளிவாக எழுது.

2. கதைப் படம்



படம் பார்த்துக் கதையைச் சொல்; எழுது.

3. இந்தியா நம் நாடு

1. இந்தியா நம்முடைய நாடு. இதனைப் பாரத நாடு என்றும் கூறுவர். ஒருவனுக்குப் பெற்ற தாயைவிடச் சிறந்தவர் எவரும் இல்லை. 'தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை' என்பார்கள். தாயைக்காட்டிலும் சிறந்த தெய்வமும் இல்லை. தாயைப்போலச் சிறந்தது நாடு.

2. இந்திய நாடு பல வகையிலும் மிகச் சிறந்தது. பல சிறந்த மலைகள் இருக்கின்றன. உலகத்திலேயே மிகச் சிறந்த மலை என்று புகழ் பெற்றது இமயமலை. அப்பெரிய மலை நம் நாட்டின் வடக்கே உள்ளது. கங்கை என்னும் புண்ணிய நதி நம் நாட்டில்தான் ஓடுகிறது. ஸிந்து, பிரமபுத்திரா, கிருஷ்ணா, மகாநதி, யமுனை, கோதாவிரி, காவிரி, தாம்பிரபரணி முதலான நதிகள் ஓடுகின்றன.

3. காசி, காஞ்சீபுரம், அயோத்தி, மதுரா, மாயை (அலகாபாது), துவாரகை, அவந்தி என்னும் சிறந்த தலங்கள் நம் நாட்டில் உள்ளன. இந்தியா நீர் வளத்தாலும், நில வளத்தாலும், குடி வளத்தாலும் சிறந்து விளங்குகின்றது. சிவ தலங்களும் விஷ்ணு

தலங்களும் நம் நாட்டில் எங்கும் நிறைந்துள்ளன. கண்களைக் கவரும் இயற்கை அழகு நிறைந்த இடங்களும் பல உள்ளன.

4. அழகிய சித்திர வேலைகள் நிறைந்த கட்டடங்கள் நம் நாட்டில் உள்ளன. உலக அதிசயங்களில் ஒன்றான தாஜ்மஹால் என்ற அழகு நிறைந்த கட்டடம் நம் நாட்டில் உள்ளது. தென்னிந்தியாவில் உள்ள கோயில்கள் அழகிய சிற்பங்களையும், சித்திரங்களையும் உடையன. சித்தன்ன வாசல், மகேந்திரவாடி, திரிசிராப்பள்ளி, மஹாபலிபுரம், அஜந்தா, எல்லோரா முதலான இடங்களில் மலையைக் குடைந்து கட்டின கோயில்களும் சிற்பங்களும் கண்டு களிக்கத் தக்கன.

5. தென்கோடியில் கன்னியாகுமரிமுனை இருக்கிறது. அங்குக் கடல் அலைகள் மோத விளங்கும் கன்னிக் குமரியின் கோயில் காணத் தக்கது. இராமேசுவரம் என்னும் புண்ணிய ஸ்தலமும் நம் நாட்டின் தென்கோடியில் உள்ளது.

6. மேற்கு மலைத் தொடரில் இயற்கை அழகு நிறைந்த இடங்கள் உள்ளன. அவை கோடை வாசத்திற்கு ஏற்றவை. நீர் வீழ்ச்சிகள் நம் நாட்டில் பல உள்ளன. வடக்கே

இயற்கை அழகிற்கு இருப்பிடமான காஷ்மீரம் இருக்கிறது.

7. நம் நாட்டில் பல மொழிகள் மக்களால் பேசப்படுகின்றன. ஒவ்வொரு மொழியிலும் சிறந்த இலக்கிய இலக்கணங்கள் உள்ளன. நம் தாய் மொழியான தமிழ் மிகப் பழைமையானது. அதில் உள்ள இலக்கிய இலக்கணங்கள் பல. திருக்குறள் என்பது தமிழில் உள்ள சிறந்த நூல். அது உலக மக்கள் அனைவர்க்கும் பொதுவான நூல்.

8. புத்தர், வர்த்தமானர், திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகர், சங்கரர், மத்துவர், இராமானுஜர், கிருஷ்ணசைதன்னியர், ராமகிருஷ்ண பரமஹம்ஸர், சுவாமி விவேகானந்தர் முதலான சான்றோர்கள் நம் நாட்டில் தோன்றினார்கள்.

9. பாலகங்காதர திலகர், கோபால கிருஷ்ண கோகலே, லாலா லஜபதிராய், வல்லபபாய் பட்டேல், காந்தியடிகள், வீர சிதம்பரனார் முதலான பல தேசபக்தர் நம் நாட்டில் தோன்றியவர். இன்று உலக மக்கள் அனைவரும் போற்றும் மனிதருள் மாணிக்கம் எனத் தகும் பண்டித ஜவஹர்லால் நேஹ்ரு விளங்குகிறார். பல கொடை வள்ளல்கள்

தோன்றிய நாடு நம் நாடு. இந்தப் பூமியில் பிறக்கப் புண்ணியம் செய்த நாம் இதன் பெருமையைக் காத்துப் போற்றுவோமாக.

அருஞ்சொற்கள் :

அடுத்து	**தலங்கள்**	**கவரும்**	**குடைந்து**
புண்ணியம்	**வளம்**	**இயற்கை**	**களிக்க**
சித்திரம்	**சிற்பம்**	**மோத**	**கோடைவாசம்**
சான்றோர்	**தேசபத்தர்**	**போற்றும்**	**கொடைவள்ளல்**

I. கேள்விகள் :—

1. 'தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை.'—விளக்கு.

2. இந்தியாவிற்கு மறு பெயர் யாது?

3. இந்தியாவில் ஓடும் நதிகள் யாவை?

4. இந்தியாவிலுள்ள புண்ணிய தலங்கள் யாவை?

5. இந்தியா எவற்றில் சிறந்தது?

6. 'தாஜ்மஹால்' என்பது பற்றி என்ன தெரியும்?

7. சித்திரங்களும் சிற்பங்களும் இந்தியாவில் எங்குக் காணலாம்?

8. சிற்பங்கள் உள்ள இடங்கள் சில கூறு.

9. தெற்கிலுள்ள புண்ணிய தலங்கள் யாவை?

10. அழகிற்கு இருப்பிடமானது எது?

11. தமிழ் எத்தகைய மொழி?

12. தமிழிலுள்ள சிறந்த நூல் யாது?

13. நம் நாட்டில் தோன்றிய சான்ருேர் சில்ரைக் கூறு.

14. நம் நாட்டுத் தேசபத்தர்களில் சிலரைக் கூறு.

15. மனிதருள் மாணிக்கம் எனப்படுபவர் யார்?

II. கீழ் வருவனவற்றை முடித்துக் காட்டு :—

1. உலகத்திலேயே மிகச் சிறந்த மலே என்று......
....

2. கண்களேக் கவரும் .... பல உள்ளன.

3. உலக அதிசயங்களில் ஒன்ருன .... உள்ளது.

இலக்கணம் :

ஒரே எழுத்து நின்று ஒரு பொருளேத் தந்தால், அது ஓரெழுத்து ஒரு மொழி எனப்படும்.

ஆ (பசு) ; கை, பூ, தீ, வை, ஈ, மா.

இரண்டு முதலாக எழுத்துக்கள் தொடர்ந்து வந்து ஒரு பொருளேத் தருவது எழுத்துத் தொடர் மொழி எனப்படும்.

பூனே —(2 எழுத்து)
பூட்டு —(3 எழுத்து)
கட்டம் —(4 எழுத்து)
பம்பரம் —(5 எழுத்து)

பெயர்ச்சொற்கள் முக்கியமாக ஆறு வகைப்படும். அவை பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினேப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்பவை. மரம்–பொருளின் பெயர் ; சென்னே–இடத்தின் பெயர் ;

பகல் - காலத்தின் பெயர்; தலை - சினையின் பெயர்; வெண்மை - நிறத்தின் பெயர்; சிரித்தல் - தொழிலின் பெயர்.

இந்தப் பாடத்திலிருந்து ஐந்து பொருள்களின் பெயர்களை எடுத்து எழுது.

பயிற்சி:

1. ஓரெழுத்து ஒருமொழிக்குச் சில உதாரணங்கள் எழுது.

2. இரண்டு முதல் ஐந்து எழுத்துக்கள் வரை வரும் சொற்களுக்கு உதாரணங்கள் கொடு.

---

4. குலோத்துங்கன்

1. தென்னிந்தியாவில் **தமிழ் நாடு** மிகச் சிறந்தது. தமிழ் நாடு முற்காலத்தில் மூன்று பிரிவுள்ளதாய் இருந்தது. மூன்று பிரிவையும் மூன்று குலத்தரசர் ஆண்டு வந்தனர். அவர் சேரர், சோழர், பாண்டியர் எனப்படுவர். சேர மன்னர் சேர நாட்டையும், சோழ மன்னர் சோழ நாட்டையும், பாண்டிய மன்னர் பாண்டி நாட்டையும் ஆண்டனர்.

2. சோழநாட்டை ஆண்ட மன்னர்களுள் **குலோத்துங்கன்** சாளுக்கிய ராஜனுடைய மகன். அவனுடைய தாயின் பெயர் **அம்மங்கா தேவி.** குலோத்துங்கன் குழந்தை

யிலேயே குற்றமற்ற அழகனுய் விளங்கினுன். அறிவும் அவனுக்கு மிகுந்திருந்தது. அரசனுக்கு வேண்டிய தன்மைகள் அனைத்தும் அவனிடம் இயல்பாகவே அமைந்திருந்தன. அவன் பதினுறு வயதுக்குள் யானை, குதிரை, தேர் முதலியன ஏறும் பழக்கத்தை உடையவனுயிருந்தான்; கைச்சண்டை, கத்திச் சண்டைகளும் பயின்ருன். குலோத்துங்கனைக் காணும்போது சிங்கக்குட்டியோ என்று யாரும் நினைப்பார்கள். அவனுக்கு அந்த வயதிலேயே இளவரசுப் பட்டம் கிடைத்தது. உடனே, அவன் ஒவ்வொரு திசையிலும் சென்ருன். எல்லா அரசர்களையும் ஜயிக்கத் தொடங்கினுன். அச்சமயத்தில் அம்மங்கா தேவியின் தந்தையும் குலோத்துங்கனுக்குப் பாட்டனும் ஆகிய இராஜேந்திர சோழன் இறந்துவிட்டான். ஆகையால், குலோத்துங்கன் சோழநாட்டுக்குத் திரும்பி வந்தான்; முடி புனைந்தான்; மணமும் புரிந்து கொண்டான்.

3. குலோத்துங்கச் சோழனுக்குப் பல நாடுகளைச் சொந்தமாக்கிக்கொள்ள ஆசையுண்டாயிற்று. ஆகையால், பெரிய சேனையுடன் புறப்பட்டான். முதலில் **வேங்கிநாடு**

சென்ருன். அது குலோத்துங்கனுடைய தந்தையின் நாடு. அதை **விஜயாதித்தன்** ஆட்சி செய்து கொண்டிருந்தான். அவன் குலோத்துங்கனுக்குச் சிற்றப்பன். குலோத்துங்கனுக்கும் விஜயாதித்தனுக்கும் சண்டை தொடங்கியது. அதில் விஜயாதித்தன் தோற்ருன். வெற்றியடைந்தவன் குலோத்துங்கனே. ஆதலால், **வேங்கிநாடு** குலோத்துங்கனுக்கு உரியதாயிற்று.

4. அந்தக் காலத்தில் **குந்தள** நாட்டை **விக்கிரமாதித்தன்** ஆட்சி செய்தான். அவனுக்கும் குலோத்துங்கனுக்கும் நெடுங்காலமாகப் பகையுண்டு. ஏன் தெரியுமா? குலோத்துங்கன் பட்டத்துக்கு வந்தவுடனே அவனை வெல்வதற்கு விக்கிரமாதித்தன் படையெடுத்து வந்தான். அந்தப் பகையை மனத்தில் கொண்டு குலோத்துங்கன் குந்தள நாடு நோக்கிப் போனுன். அந்த நாட்டில் **வனவாசி** என்ற ஓர் ஊர் உண்டு. அங்கே **ஜயசிங்கன்** வசித்திருந்தான். அவன் விக்கிரமாதித்தனுடைய தம்பி. ஜயசிங்கன் விக்கிரமாதித்தனுக்குப் பிரதிநிதியாக வனவாசியில் அரசு செய்தான். அவனைக் குலோத்துங்கன் முதலில் வென்ருன். வனவாசி குலோத்துங்கனுக்

குச் சொந்தமாயிற்று. பின் விக்கிரமாதித்தனை வெல்லப் போனான்.

5. விக்கிரமாதித்தன் **கலியாணபுரம்** என்னும் தலைநகரில் வசித்திருந்தான். குலோத்துங்கன் போருக்கு வரும் செய்தியைக் கேட்டு எதிர்த்துப் படையுடன் வந்தான். கோலார் ஜில்லாவில் உள்ள **நங்கிலி** என்னும் இடத்தில் இருவர் படைகளும் சந்தித்தன. அவ்விடத்திலேயே பெரும்போர் நடந்தது. விக்கிரமாதித்தன் பலம் குன்றித் தோற்று ஓடினான். அவனைக் குலோத்துங்கன் விடாமல் பின் பற்றிச் சென்றான். சென்றவன் **துங்கபத்திரை நதிக்**கரை வரையில் துரத்திவிட்டுத் திரும்பினான். படையுடன் தலைநகரில் நுழைந்தான்; அதையும் கைப்பற்றினான். ஆதலால், குந்தள நாடும் சோழனுக்குச் சொந்தமாயிற்று. இப்படியே குலோத்துங்கன் பாண்டியரையும் சேரரையும் வென்று திரும்பினான்.

6. குலோத்துங்கனுக்குப் பல சிற்றரசர்கள் கப்பம் கட்டி வந்தனர். அவர்களுள் **அனந்தவன்மன்** என்னும் வடகலிங்கத்துச் **சோடகங்கன்** என்பவனும் ஒருவன். அவன் இரு முறை கப்பம் செலுத்தாமல் நிறுத்தினான். அதனால், சோழன் சினம் கொண்டான்; தன்

சேனாதிபதியாகிய **கருணாகரத் தொண்டைமா னைச்** சேனையுடன் அனுப்பினான். அவன் சென்று கலிங்க நாட்டில் உள்ள ஊர்களை அழிக்கத் தொடங்கினான். ஆதலால், அந்நாட்டுக் குடிகள் மிகவும் வருந்தினார்கள்; அரசனை அணுகி முறையிட்டார்கள். ஆனாலும், அரசன் அவர்களை நோக்கி, "நீங்கள் அஞ்சாதீர்கள்!" எனக் கூறிச் சும்மாவிருந்தான். பின் அமைச்சனும் சோடகங்கனுக்குச் சில புத்திமதிகள் கூறினான். அதையும் அவன் கேட்கவில்லை.

7. சோடகங்கன் சோழர் படையுடன் போர் செய்தான். அவனால் எதிர்த்து நிற்க முடியவில்லை; அஞ்சி ஓடி, ஒரு மலையில் மறைந்தான். மறைந்தவனைச் சோழனுடைய சேனை வீரர்கள் விடவில்லை. பற்றிச் சென்று, பார்த்திபனை குலோத்துங்கன் எதிரில் நிறுத்தினார்கள். அவனை மன்னன் சிறைப்படுத்திவிட்டுக் கலிங்கத்தைத் தன் நாட்டுடன் சேர்த்துக் கொண்டான்.

8. குலோத்துங்கன் சிறந்த பத்தன். குலோத்துங்கன் பல விஷ்ணு கோவில்களையும், சிவன் கோவில்களையும் கட்டுவித்தான். அவன் சிதம்பரத்து ஆலயத்தில் உள்ள

பேரம்பலத்தைப் பொன்னுல் அழகு செய்தான். ஆகையால், அவனுக்குப் **பேரம்பலம் பொன் வேய்ந்த சோழன்** என்ற பெயர் வழங்கிற்று. பல நாடுகளையும் வென்ற குலோத்துங்கனைத் **'திரிபுவன சக்கரவர்த்தி'** என்பது வழக்கம்.

9. குலோத்துங்கன் பல சத்திரங்களையும் வைத்தியசாலைகளையும் அமைத்தான். பல கிணறுகள் வெட்டுவித்தான்; சாலைகளில் மரங்களை வளர்க்கச் செய்தான். அவனுல் வெட்டப்பட்ட குளங்களும் ஏரிகளும் கணக்கற்றவை. அப்படிப்பட்ட ஈடில்லாத சோழர் குலத்துக் குலோத்துங்கன் நாற்பத்தொன்பது ஆண்டுகள் அரசாட்சி செய்தான். அவன் வாழ்வு மிகச் சிறப்புற்று இருந்தது.

அருஞ்சொற்கள் :

ஆண்டனர்	**அமைச்சன்**	**தன்மை**
வெல்வதற்கு	**சந்தித்தன**	**பிரதிநிதி**
பார்த்திபன்	**அம்பலம்**	**பத்தர்கள்**
குன்றி	**வாழ்வு**	**பட்டம்**
புனைந்தான்	**அணுகி**	**கப்பம்**
சேனுதிபதி	**இயல்பு**	**ஈடு**

பயிற்சி :

விளக்கம் :—பாண்டியர் + நாடு = பாண்டிய நாடு. சோழர் + நாடு = சோழ நாடு. சிங்கம் + குட்டி = சிங்கக் குட்டி. இளமை + அரசு = இளவரசு.

இரு சொல்லால் கூறு :—

ஆண்டனர், அழகன், பயின்றான், வெல்ல, அஞ்சாதீர்கள்.

ஒரே சொல்லால் கூறு :—

இறந்துவிட்டான், ஆட்சி செய்து, அழகு செய்தான், வளர்ச்சி செய்தான்.

ஒவ்வொரு சொல்லை ஒவ்வொரு தொடரில் கூட்டி எழுது :—

மிகுந்திருந்தது, பயின்றான், இளவரசு, ஆசை, வெல்ல, குன்றி, பின்னர்.

தொடர்களை முடி :—

1. சாளுக்கிய ராஜராஜனுடைய மகன் ——.

2. குலோத்துங்கன் சேனைகளைத் திரட்டிக் கொண்டு ——.

3. ஜயசிங்கன் குலோத்துங்கனுடன் போர் செய்து ——.

4. சோடகங்கன் ஓடி ஒரு மலையில் ——.

கேள்விகள் :

1. அரசகுமாரன் பழக வேண்டியவை எவை ?

2. குலோத்துங்கனுக்கு வேங்கி நாடு எப்படி உரிமையாயிற்று ?

3. விக்கிரமாதித்தனுடைய தம்பி எவன் ?

4. பெரிய புராணம் பாடியவர் யார் ?

இலக்கணம் :

இந்தப் பாடத்திலிருந்து இரண்டு பொருட்பெயர்களும் ஐந்து இடப் பெயர்களும் எடுத்து எழுது.

---

5. நரி காகத்துக்குக் காட்டிய நல்வழி

1. ஒரு மலைச்சாரலில் பெரிய ஆலமரம் ஒன்றிருந்தது. அந்த மரத்தின் உச்சியில் பல பறவைகள் கூடு கட்டி வாழ்ந்தன. அவைகளோடு காக்கையும் வசித்திருந்தது. பல நாள் வரையில் பறவைகள் எந்தக் கவலையுமின்றித் தங்கியிருந்தன. அப்போதைக்கப்போது முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தன. இனம் பெருகப் பெருகப் பறவைகளுக்கு மகிழ்வும் பெருகி வந்தது. அவை விடியற்காலையில் இனிமையாகப் பாடிக் காலங்கழிக்கும். மாலையில் கூடிக் குலாவிப் பொழுது

போக்கும். அது மாத்திரமா? எப்போதுமே அம்மரம் மணவீடுபோல ஓசை மலிந்திருக்கும்.

2. அந்த மரம் மிகவும் பழமையானது. ஆதலால், அடி மரம் பெரிய பொந்துடையதாய் இருந்தது. அப்பொந்தில் ஒரு பெரிய பாம்பு வந்து குடி சேர்ந்தது. அது கருநாகம். அது அவ்விடத்தில் வந்து சேர்ந்த சில நாட்களுக்குள் மரத்தின்மீது ஏறிச்செல்லத் தொடங்கியது. சென்று என்ன செய்தது! ஒவ்வொரு கிளைக்கும் போய்க் கூடுகளைச் சோதிக்கத் தொடங்கியது. அதோடு நின்றதா? இல்லை; பறவைகளினுடைய முட்டைகளை உடைத்துக் குடித்துவிட ஆரம்பித்தது. சில முட்டைகளைக் கீழே எறிந்தது. கீழே விழும் முட்டைகள் உடைந்து பாழாய் விடும் அல்லவா? இந்தச் செய்கையைக் கண்ட பறவைகள் வயிறெரிந்தன; வாய் விட்டு ஒன்றுக்கொன்று தெரிவித்துக்கொண்டன; துக்க மிகுதியால் வருந்தி அழுதன.

3. பறவைகளின் கஷ்டத்தையோ நஷ்டத்தையோ அரவம் நினைக்குமா? தன் தொழிலைத்தான் விடுமா? தன் காரியத்தைத் தடையின்றி நடத்திக்கொண்டுதான் இருந்தது நாகம். இந்தக் கஷ்டத்தைப் பொறுக்க முடி

யாமல் எல்லாப் பறவைகளும் வேறு மரத்திற்குக் குடி போயின. ஆனால், காக்கை மாத்திரம் குடி போகவில்லை; நாகத்தைப் போக்கவே வழி தேடியது.

4. காக்கைக்கு மனவருத்தம் மிகுந்தது. கடைசியில் அதன் மனத்தில் ஒரு யோசனை புலப்பட்டது. மறுதினம் அது தன் நண்பனாகிய ஒரு நரியிடம் சென்றது. தனக்கு உள்ள குறையைக் கூறியது. காக்கையின் மனக் கலக்கத்தை நரி கண்டது; "நண்பரே, காக்கையாரே, வருந்தாதீர்!" என்று தைரியம் கூறியது; அதனோடு நல்ல யுத்தியும் கூறிவிட்டது. காகத்திற்கு உண்டான களிப்புக்குக் கரையில்லை. அடுத்த நாள் காக்கை என்ன செய்தது தெரியுமா? அந்த ஊர் அரசன் அரண்மனைக்குப் போயிற்று; நெடுநேரம் காத்திருந்தது. அரசி நண்பகலில் தன் நகைகளைக் கழற்றி வைத்துக் குளிக்கத் தொடங்கினாள். அப்போது அது ஒரு நவரத்தின மாலையைத் தூக்கிக் கொண்டு பறந்தது; தன்னை எல்லோரும் காணும்படி மெதுவாகவே பறந்தது.

5. அரண்மனை வீரர்கள் பார்த்துக் கொண்டா இருப்பார்கள்? காக்கையைப்

பின் தொடர்ந்தார்கள்; கையில் வாளும், ஈட்டியும், தடியும் கொண்டு வந்தார்கள். அவர்களுக்கு எதிரிலேயே காகம் மாலையைப் பொந்தில் போட்டது. வந்த வீரர்கள் உடனே பொந்தை அறுத்தார்கள். அதற்குள் இருந்த பாம்பு 'புஸ், புஸ்' என்று சீறிப் படமெடுத்து வந்தது. வந்ததுதான் தாமதம்! அது பட்ட அடிக்குக் கணக்கே இல்லை. உயிர் துடித்துக் களைத்துக் கீழே விழுந்துவிட்டது.

6. வீரர்கள் மாலையை எடுத்துக் கொண்டு ஏகினார்கள். காக்கை, தன் இனத்தையும் மற்றப் பறவைகளையும் கூவி அழைத்தது. பாம்பு உயிர் துடிப்பதைக் காட்டியது. போதாக்குறைக்கு மற்றப் பறவைகளும் பாம்பை வருத்தத் தொடங்கின. காக்கை பாம்பின் கண்களைக் கொத்திப் பிடுங்கித் தின்றது. அதே இரவில் பழையபடி அந்தப் பெரிய மரத்திற்கே பறவைகள் யாவும் குடிவந்து சேர்ந்து மகிழ்ச்சியாக வாழ்க்கையை நடத்தின.

7. நரி காட்டிய நல்வழியினால் பறவைகளுக்கு எவ்வளவு நன்மை ஏற்பட்டது பாருங்கள்!

அருஞ்சொற்கள் :

மலைச்சாரல்	தரும்	இரத்தினம்
உச்சி	பாழ்	ஈட்டி
குலாவி	நஷ்டம்	சீறி
மலிந்திருக்கும்	யுத்தி	துடித்து
பொந்து	கலக்கம்	களைப்பு
சோதிக்க	நவம்	எரிந்தன

பயிற்சி :

விளக்கம் :—மணம் + வீடு = மணவீடு, கருமை + நாகம் = கருநாகம். வயிறு + எரிந்தன = வயிறெரிந்தன. மனம் + கலக்கம் = மனக்கலக்கம், நவம் + ரத்தினம் = நவரத்தினம்.

இரு சொல்லால் எழுது :

வாழ்ந்தன, உடனே.

ஒரே சொல்லால் எழுது :

தங்கியிருந்தன, வயிறெரிந்தன, பெருகி வந்தது, தைரியம் கூறியது.

1. பின் வரும் சொற்களையமைத்துத் தனித்தனி வாக்கியங்கள் எழுது :—

அப்போதைக்கப்போது, வருந்தி, உள்ளதை யுள்ள படி, 'புஸ் புஸ்'.

2. பாம்புக்கு உள்ள வேறு சில பெயர்களை எழுது.

தொடரை முடி :

1. மரத்தின் உச்சியில் பறவைகள் ——.
2. அடி மரத்தில் பெரிய பொந்து ——.

3. காக்கைக்கு நரி நல்ல தந்திரம் ——.
4. அடிபட்ட பாம்பு துடிதுடித்து ——.

கேள்விகள் :

1. ஆலமரம் எதனால் மணவீடுபோல இருந்தது ?
2. பாம்பு செய்த பெரிய தீங்கு யாது ?
3. காக்கைக்கு நரி என்ன யுத்தி கூறியிருக்கும் ?
4. நவரத்தினம் என்பவை என்ன ?
5. காக்கை எப்படிப் பாம்பைப் பழி தீர்த்தது ?

இலக்கணம் :

இந்தப் பாடத்திலிருந்து பொருட்பெயர்கள் இரண்டும், இடப்பெயர்கள் இரண்டும், காலப்பெயர்கள் மூன்றும் எழுது.

---

6. மௌன வாசிப்பு-I

கீழ் வருவதை மனத்திற்குள் படி :—

மரங்கள் அடர்ந்த காடு ஒன்று இருந்தது. அக்காட்டில் நரி ஒன்று இருந்தது. அந்த நரியை ஈக்கள் மொய்த்துத் தொந்தரவு செய்தன. நரியால் ஈக்கள் செய்யும் தொந்தரவைப் பொறுக்க முடியவில்லை. அது அவைகளை ஓட்ட ஒரு தந்திரம் செய்தது.

நரி, வாயில் ஓர் உலர்ந்த குச்சியைக் கவ்விக்கொண்டது. அது ஒரு நீர் ஓடையை அடைந்தது ; மெதுவாகத் தண்ணீரில் இறங்

கிற்று. பாதத்திலிருந்த ஈக்கள் காலில் ஏறிக்கொண்டன. பின்னும் நரி நீரில் நடந்து சென்றது. காலில் இருந்த ஈக்கள் உடலில் ஏறிக்கொண்டன.

பின்னும் நரி நீரில் சென்றது. ஈக்கள் உடலிலிருந்து நரியின் தலைக்கு வந்தன. நரி தலையை நீரில் நனைக்கத் தொடங்கிற்று. ஈக்கள் அதன் வாயிலிருந்த குச்சிக்கு வந்தன. நரி வாயிலிருந்த குச்சியைத் தண்ணீரில் போட்டது. நரி ஓடிப் போயிற்று. நரி ஈக்களின் தொந்தரவினின்றும் நீங்கிற்று.

கேள்விகள் :

1. நரி எங்கு இருந்தது?
2. அதனைத் துரத்தினவை எவை?
3. நரி எவ்வாறு துன்பத்தினின்றும் தப்பிற்று?
4. இக்கதையால் நீ அறியும் நீதி யாது?

பயிற்சி 1.

கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்பு :—

(a) மரங்கள் ——— காடு ——— இருந்தது.
(b) அந்த—யை ஈக்கள் மொய்த்துத் — செய்தன.
(c) பாதத்திலிருந்த — உடலில் ——.

பயிற்சி 2.

அது ஒரு நீர் ஓடையை அடைந்தது.
அது மெதுவாகத் தண்ணீரில் இறங்கியது.
—இரண்டினையும் ஓரே வாக்கியமாக எழுது.

பயிற்சி 3.

1. நரியின் குணத்தைப் பற்றி நீ என்ன அறிகிறாய்?

2. 'நரியின் தந்திரம்' என்பதை விளக்க வேறொரு கதை சொல்; எழுது.

---

7. கம்பர் பெருமை

1. சோழநாட்டிலேயுள்ள ஊர்களில் **திருவழுந்தூர்** கம்பர் பிறப்பிடமாய் அமைந்தது. இவ்வூரிலுள்ள உவச்சர் ஒருவருக்கு மகனாகப் பிறந்தார் கம்பர். இவர் பிறந்த சிலநாட்களில் பெற்றோர் இருவரும் இறந்தனர். இந்தக் குழந்தையை உறவினர் அன்புடன் வளர்த்தனர். தெய்வத்தின் திருவருளாலும் தமிழ் நாட்டின் புண்ணியத்தாலும் இவர் நன்கு வளர்ந்து, கல்வியில் சிறந்து விளங்கினார்.

2. உவச்சர்கள் காளி கோயிலுக்குப் பூஜை செய்கிறவர்கள். அதே தொழில் நம் கம்பருக்கும் உண்டு. இவர் காளி தேவியின் மீது மிகுந்த பத்தி கொண்டு முறை தவறாமல் பூஜை செய்வார். காளி தேவியின் அருளாலேயே கவிபாடும் இவர் திறமை பெற்றனர் என்று சொல்லுவதுமுண்டு. ஒரு நாள் இரவில் கம்பருக்குக் கனவில் தேவி காட்சி தந்தாள்; அவ

ரது நாவில் சில எழுத்துக்களைத் தனது சூலத்தால் தேவி எழுதினுள் என்று கூறுவர். அது முதல் கம்பர் கல்வியில் ஊக்கமுடைய வராய்விட்டார்; இனிமையும் அருமையும் உள்ள கவிகள் பாடத் தொடங்கினுர். கவி பாடும் திறமை பெற்றதால் யாவரும் இவரைக் **கம்பர்** என்று மரியாதையாக வழங்கத் தொடங்கினர்.

3. அப்போது திருவெண்ணெய் நல்லூரில் வள்ளல் ஒருவர் வசித்திருந்தார். அவர் பெயர் சடையப்பர். கம்பர் சடையப்ப வள்ளலிடம் சென்ருர். தமது கல்வித் திறமையைக் காட்டினுர். மேலும் கற்க விரும்புவதாகவும், உதவி செய்ய வேண்டுமென்றும் கோரினுர். அப்படியே வள்ளல் உணவு, உடை இரண்டும் தந்து, கற்கவும் ஏற்பாடு செய்தார். கம்பர் மேலும் மேலும் கல்வி கற்றுப் பெருமை அடைந்தார்.

4. கம்பரின் கல்வி மிகுதியையும் கவி பாடும் தகுதியையும் சடையப்பர் கண்டு களித்தார். அப்போது கம்பர் செய்த நூல்கள் பல. அவற்ருேடு **இராமாயணம்** என்னும் பெரு நூலும் செய்தார். இராமாயணத்தில் உள்ள சொல் இனிமையும் பொருள் ஆழமும் கற்

பவர்களைக் களிக்கச் செய்யும். அதனால், அந்த நூலுக்கும் கம்பருக்கும் எங்கும் புகழ் உண்டாயிற்று. அதை அறிந்த சோழன் கம்பரைத் தனது அவைக்களத்தில் கவிவாணராக அமர்த்திக்கொண்டான்; **கவிச்சக்கரவர்த்தி** என்ற பட்டமும் தந்தான்.

5. ஒரு சமயத்தில், கம்பராகிய கவியரசருக்கும் சோழனாகிய புவியரசனுக்கும் பகை ஏற்பட்டது. அதனால்,சோழன் கம்பரைப்பார்த்து, "நீர் எனது நாட்டில் வாழலாகாது; வேறிடம் போய்விட வேண்டும்." என்றான். அவர் அப்போதே புறப்பட்டுக் கால் நடையாகச் **சேர நாடு** சென்றார். அங்கும் அவர் பெருமையோடே வாழ்வு நடத்தினர். கற்றவர்களுக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்புத்தானே! ஆனால், சோழன் கம்பரைப் பிரிந்து நெடுநாள் வாழவில்லை. சிறிது காலத்திற்குள் அவரைக் காண விரும்பினான்: தேடிக் கண்டு பிடித்தான்; மீண்டும் வருமாறு வேண்டினான். அப்போதும் அவர் மறுத்துப் பேசவில்லை; திரும்பி வந்தார். அவரைக் கண்ட சோழன் மனம் மகிழ்ந்தான்.

6. அறிவுடையவர்கள் பிறர் செய்த குற்றத்தை மறந்துவிடுவார்கள் என்பதைக்

கம்பர் உண்மையாக்கிவிட்டார். அவர் சோழனிடத்தில் முன்போலவே நட்பாய் இருந்தார். ஆகையால் சோழன் முன்னிலும் ஆயிரமடங்கு கம்பருக்குப் பெருமை கொடுத்தான். புரவலரைக்காட்டிலும் புலவர்கள் புகழுடையவர்களாகவே வாழ்வார்கள் என்பது இதனால் தெரிகிறது அல்லவா? கம்பரைப்பற்றிய சில பழமொழிகளை இங்கே கூறுகிறோம்.

"கல்வியிற் பெரியவர் கம்பர்."

"கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும் கவி பாடும்."

அருஞ்சொற்கள் :

உவச்சர்	**தகுதி**	**புரவலர்**
உறவினர்	**அவைக்களம்**	**புலவர்**
திருவருள்	**கவிவாணர்**	**மடங்கு**
புண்ணியம்	**பட்டம்**	**கட்டுத்தறி**
வழங்கியது	**கால் நடை**	**புவியரசு**
கோரினர்	**மறுத்து**	**வள்ளல்**

பயிற்சி :

பிரி :—நாளடைவில், வள்ளலிடம், அவைக்களம், கவியரசு, வாழலாகாது, வேறிடம், நெடுநாள், ஆயிரமடங்கு.

எதிர்மொழி எழுது :

புண்ணியம், பழமொழி, இல்லை, இரவு, கனவு, சென்றார்.

பின்வரும் சொற்களுள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தொடரில் அமைத்து எழுது :—

ஈன்ருர், திருவருளால், திறமை, மேலும் மேலும், எங்கும்.

தொடரை முடி :

1. திருவழுந்தூர் சோழநாட்டைச்——
2. கம்பர் காளியின் பாதத்தை நம்பி——
3. திருவெண்ணெய் நல்லூரில் வசித்த வள்ளல்—
4. புரவலரைக்காட்டிலும் புலவருக்கு அதிக புகழ்——

கேள்விகள் :

1. கம்பர் எதனுல் கல்வியில் மேம்பட்டார்?
2. கம்பராமாயணம் எப்படிப்பட்ட நூல்?
3. அறிவுடையவர்கள் இயல்பு யாது?

இலக்கணம் :

இந்தப் பாடத்திலிருந்து பொருட்பெயர்கள் இரண்டும், இடப்பெயர்கள் இரண்டும், சினைப்பெயர்கள் ஐந்தும் எழுது.

---

8. தென்னை

1. நம் நாட்டில்உள்ள மரங்களுள் தென்னையும் ஒரு வகை. அது மிக உயரமாய் ஓங்கி வளரும். அதற்குக் கிளையில்லை. ஆனுல், மரத்தின் உச்சியில் குருத்து விட்டு வளரும். தென்னை உள் வளர்ச்சியுடையது. குருத்தை

யடுத்து ஏறக்குறைய இருபது மட்டைகள் அடர்ந்திருக்கும். தென்னையைப் பெரும்பா லும் தோப்புகளாக வைத்து வளர்க்கிறார்கள்.

2. தென்னையை வைத்து வளர்ப்பவர் கள் அதனால் அதிக பயன் அடைகிறார்கள்.



தென்னையில் உண்டாகும் எந்தப் பொருளும் வீணாவதில்லை. பயன்படுத்தப் பழகியவர்கள் சில தென்னை மரங்களை வைத்துக்கொண்டு தமது வாழ்க்கைக்கு வேண்டிய பொருளைச் சம்பாதித்துக்கொள்ளுவார்கள். தென்னை ஓலையைக் கிழித்துக் கீற்று முடையலாம்;

அடுப்பு எரிக்கலாம். குருத்து ஓலைகளால் தேர், பந்தல் முதலியவைகளை அழகு செய்ய லாம். ஓலையின் நடுவிலுள்ள நரம்புக்கு **ஈர்க்கு** என்பது பெயர். அதைக் கற்றையாகக் கட்டிக் குப்பை பெருக்கலாம்.

3. தென்னை மரத்தில் ஆண்டிற்கு இரு முறை **பாளை** விடும். அந்தப் பாளையினுள் பூக்கள் நிறைந்த கொத்து அடங்கியிருக்கும். அந்தக் கொத்து, பல காம்புகளையுடையது. ஒவ்வொரு காம்பிலும் பல மலர்கள் உண்டு. ஆனாலும், எல்லாப் பூக்களிலும் பிஞ்சுகள் ஓங்குவதில்லை. பெரும்பாலும், காம்புக்கு ஒரு காய்தான் பெருக்கும். இப்படி, ஒரு குலையில் சுமார் நாற்பது, ஐம்பது காய்கள் வரை காய்க்கும். சில செழிப்பில்லாத மரங்களில் குலைக்கு நான்கு ஐந்து காய்களே இருக்கும். காய்கள் பருத்துப் பசுமையாய் இருக்கும். சிவந்த காயுள்ள ஒரு வகைத் தென்னையும் உண்டு.

4. முற்றாத காய்க்கு **இளநீர்** என்பது பெயர். சுவாமி அபிஷேகத்துக்கு இளநீர் உதவும். அந்தக் காயில் நீர் நிறைந்திருக்கும். அந்த நீர் இனிப்பாயிருக்கும். அதை வெயில் வேளையில் குடித்தால் குளிர்ச்சியாயிருக்கும்; நீர் வேட்கையை அடக்கிவிடும், இளநீருக்குள்

தோசை போன்ற வழுவழுப்பான பற்று இருக்கும். அது வழுவழுப்பாயிருப்பதனுல், **வழுக்கை** எனப்படும். அதுவே முற்றிப் பருப்பாகும். பருப்பின் நிறம் வெண்மை.

5. இளநீர் முற்றினுல் தேங்காய் எனப்படும். பழுத்த தேங்காயைத் **தேங்காய் நெற்று** என்பார்கள். அதன் பருப்பு, சமையலுக்கும், மிட்டாய், பாயசம் முதலியவற்றில் சேர்க்கவும் உதவும். முற்றிய பருப்புக்குக் **கொப்பரை** என்பது பெயர். அதைக் காய வைத்துச் செக்கிலிட்டு ஆட்டி நெய்யும் எடுப்பார்கள். சில நாடுகளில், தேங்காய் நெய், பட்சணம் செய்வதற்கு உபயோகப் படுத்தப்படும். அதனுல் **சோப்பும்** செய்வார்கள்.

6 .தேங்காயின்மேல் மூடியிருக்கும் நார் மட்டைகளை ஊற வைத்து, அடித்து நாருக்கிக் கயிறு திரிப்பார்கள். கொட்டாங்கச்சியை அகப்பையாகச் செய்வார்கள். ஓலை மட்டை, நார்மட்டை, கொட்டாங்கச்சி முதலியவைகளையும் அடுப்பு எரிப்பதுண்டு. பாளையின் மூடியை ஊற வைத்து, சிறு விழுது போலக் கிழித்துப் பந்தல் முதலியவை கட்டலாம். பாளைக்காம்பை நறுக்கி மயிர்க்குச்சுபோலச்

செய்து சுவருக்குச் சுண்ணும்பு பூசலாம். காய்க் காம்புகளால் சிலர் பல் தேய்ப்பதுண்டு.

7. தென்னை மரம் வளர வளர அதன் மட்டைகள் பழுத்து உதிர்ந்துவிடும். அந்த வடுக்கள் மரத்தைச் சுற்றித் தெரியும். தேங் காய் நெற்றை மணற்குழிகளில் புதைத்து நீர் விட்டு வந்தால், ஐந்தாறு மாதங்களில் முளை கிளம்பும். தென்னையின் செடியைத் **தென் னம்பிள்ளை** என்பது வழக்கம்.

தென்னை மரம் மணற்பாங்கான நீர்வள முள்ள இடத்தில் நன்ருய் வளரும்; ஆகை யால், ஆற்ருேரங்களிலும் கடற்கரைகளிலும் அதிகமாகப் பயிரிடுவார்கள். நன்றி மறவாத நல்லவர்களுக்குத் தென்னையை உதாரணமாகக் கூறுவது உண்டு.

> 'நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
> என்று தருங்கொல் எனவேண்டா;—நின்று
> தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
> தலையாலே தான்தருத லால்.'

அருஞ்சொற்கள்:

குருத்து	**சோப்பு**	**வழுக்கை**
வளர்ச்சி	**மட்டை**	**அபிஷேகம்**
அடர்ந்து	**வடுக்கள்**	**நெற்று**
பயன்	**செழிப்பு**	**மணற்பாங்கு**

பந்தல்	வேட்கை	வளம்
பட்சணம்	வரவழைப்பு	ஏறக்குறைய
விழுது	பற்று	தோப்பு

பயிற்சி :

பிரி :—அயர்ந்திருக்கும், வீணுவதில்லை, செழிப்பில்லாத, மணற்பாங்கு, கடற்கரை.

எதிர்ப்பதம் எழுது :

உயரம், பல, சிலர்.

பின் வரும் சொற்களுள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தொடரில் அமை :—

ஆண்டிற்கு, சுமார், நன்றி, வழுவழுப்பான, வளர வளர.

தொடரை முடி :

1. தென்னை மணற்பாங்கான இடத்தில்——
2. முற்ருத தேங்காயின் பெயர்——
3. தென்னை வேரினுல் உண்ட நீரை இளநீராகத்——.

கேள்விகள் :

1. தென்னை எத்தனை நாட்களுக்கொருமுறை பாளை விடும் ?
2. நெற்று என்பது எதற்குப் பெயர் ?
3. வழுக்கை என்பது யாது ?
4. தேங்காய் நெய்யால் என்னென்ன பயன் உண்டு ?

இலக்கணம் :

இந்தப் பாடத்திலிருந்து பொருள், இடம், காலம், சினை என்பவற்றைக் குறிக்கும் பெயர்கள் இரண்டிரண்டும், குணப்பெயர் ஐந்தும் எடுத்து எழுது.

---

9. வெளி வேஷம்

1. உலகத்தில் உள்ள மக்கள் அனைவரும் ஒரே விதமாய் இருப்பதில்லை; உருவத்தில் தனித்தனி அமைப்புடையவர்களாகவே இருக்கிறார்கள்; அது போலவே, குணத்திலும் வெவ்வேறு வகையாய் இருக்கிறார்கள். மனிதர்களுடைய எண்ணமும் அப்படித்தான்: சிலர் நல்ல எண்ணமுடையவர்கள் ; சிலர் கெட்ட எண்ணமே உள்ளவர்கள்.

2. நல்ல எண்ணங்கள் எவை? கெட்ட எண்ணங்கள் எவை? எல்லா உயிரையும் தன் உயிர் போல் எண்ணுதல், அனைவரும் இன்பமாய் வாழ வேண்டும் என எண்ணுதல் முதலியவை நல்ல எண்ணங்கள். மற்றவர் பொருள்களைக் கவர நினைத்தல், பிறர் நன்மை கண்டு பொறாமைப்படுதல், 'நாமே உயர்வடையவேண்டும்; நாமே இன்பமடைய வேண்டும்; எல்லாம் நமக்கே இருக்க வேண்டும்,' என எண்ணுதல் முதலியவை கெட்ட எண்ணங்கள்.

3. கெட்ட எண்ணமுடையவர்கள் நயமாகப் பேசுவார்கள்; உள்ளத்தில் நஞ்சும் உதட்டில் வெல்லமும் உடையவர்களாயிருப்பார்கள்; பார்வைக்கும் நல்லவர்களாகவே தோன்றுவார்கள். ஆதலால், அவர்களை நம்பலாகாது. அப்படிப்பட்ட மோசக்காரன் ஒருவன் கதையை இங்கே கவனிப்போம்:

4. கலிங்க நாட்டில் **அரிபுரம்** என்னும் ஊர் இருக்கிறது. அதில் **தேவதத்தன்** என்ற ஒரு வணிகன் வசித்து வந்தான். அவன் நிறைந்த செல்வமுடையவன்; நற்குணமும் நற்செய்கையும் நிறைந்தவன். அவனுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் **தருமதத்தன்.** மகனும் தந்தையைப்போலப் புத்திசாலியாகவே இருந்தான். தந்தை, தருமதத்தனைச் செல்வமாக வளர்த்தான். ஆனால், தக்க வயது வருவதற்குள் பெற்றோர் இருவரும் இறந்துவிட்டனர். பெற்றோரை இழந்த தருமதத்தன், பெரிதும் வருந்தினான்; பின்பு நாளடைவில் மனந்தெளிந்து, குலத்தொழில் செய்யத் தொடங்கினான்; தந்தை வைத்த பொருளை மேலும் மேலும் வளர்த்தான்; அவ்வூரிலுள்ள எல்லாரைக்காட்டிலும் மேன்மையாய் வாழ்ந்தான்.

5. ஒரு நாள் தருமதத்தனைத் தேடி ஒருவன் வந்தான். அவன் காவிச்சட்டை கால் வரையில் தொங்க அணிந்திருந்தான்; திருநீறு பூசி, உருத்திராக்ஷ மாலை பூண்டு, யோகதண்டமும் கமண்டலமும் தாங்கியிருந்தான்; தலையில் சடை முடித்திருந்தான். அவன் முகத்தில் தாடியும் மீசையும் நீண்டு வளர்ந்திருந்தன. அவன்



தருமதத்தன் சந்நியாசியை வணங்குதல்

பாதக்குறடு மிதித்து நடந்து வந்தான்; வாய் திறக்கும்போதெல்லாம், 'சம்பு, சபாபதி, சதாசிவம்' என்று உரைத்தான். இப்படிப்பட்டவனை யார்தான் ஐயப்படுவார்கள்? உண்மையான சிவனடியார் என்றே தருமதத்தன் அவனை நம்பினான்.

6. நம்பிய தருமதத்தன் வந்தவனது காலில் விழுந்தான்; பாதங்களைக் கையால் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டான்; அவனை ஒரு நாற்காலியில் அமரச் செய்தான்; சிறிது நேரத்தில் நல்ல உண்டியும் கொடுத்தான். புசித்த வேஷதாரி, வணிகனை மிகவும் அன்போடு பார்த்தான்; புன்சிரிப்புக் காட்டினான். அதைக் கண்ட தருமதத்தன் மனம் பின்னும் அவ்வேஷதாரியினிடம் அதிகமாக ஈடுபட்டது. அவன் கை கட்டி, வாய்பொத்தி, அடங்கி ஒடுங்கி அண்டையில் நின்றான். அப்போது போலிச் சந்நியாசி வாய் திறந்து, "தம்பி, என்னிடம் ஓர் அருமையான வித்தை இருக்கிறது. உன் நற்குணத்தைக் கண்டு அதை உனக்குக் காட்ட விரும்புகிறேன்; ஆனால், நீ அதை யாரிடமும் சொல்லக்கூடாது," என்றான். வாலிபனும், "அப்படியே ஆகட்டும்," எனப் பணிவுடன் சொன்னான்.

7. அப்பொழுது வேஷதாரி தருமதத்தனை நோக்கி, "நான் காட்ட நினைத்திருக்கும் வித்தை இன்னது என்பது உனக்குத் தெரியுமா? சொல்லுகிறேன், கேள்: கைலாயத்தை வெள்ளிமலை என்றும், மேருவைப் பொன்மலை என்றும் சொல்லுமாறு செய்வேன்; அதே

போல, உன்னிடத்திலுள்ள பொருள்கள் அனைத்தையும் கொண்டு வந்தால், தங்கமாக்கித் தருவேன். அதற்காக நீ எனக்கு ஒரு துரும்பும் தரவேண்டுவதில்லை,'' என்று ஆசை காட்டினன்.

8. ஆசை மொழி கேட்ட தருமதத்தன் விரைந்து ஓடினன். தன்னிடம் இருந்த பொருள் எல்லாவற்யையும் கொண்டு வந்து வேஷதாரியின் எதிரில் வைத்தான். அவற்றைக் கண்ட மோசக்காரன் கலுக்கென்று சிரித்தான்; "இவ்வளவுதானு!'' என்று ஏளனமாகக் கூறினன். அவன் முகத்தில் வெறுப்புத் தோன்றியது. ஆகையால், அவ்வணிகன் மறுபடி எழுந்து போனன். வீடு நிலம் முதலியவற்றைப் பணமாக்கிக் கொண்டு வந்தான். அப்போது வேஷதாரி சிறிது மகிழ்ந்தான். நகை, பணம் முதலியவை எல்லாவற்றையும் சேர்த்து மூசையில் வைத்து மூடினன். இருட்டான அறை ஒன்றில் விறகுகளை அடுக்கி நெருப்பிட்டான். மாயக்காரன் செய்வதைத் தருமதத்தன் அருகில் நின்று பார்த்துக்கொண்டிருந்தான். உடனே, அந்தச் சந்நியாசி ஏதோ ஒரு பொடியை நெருப்பில் தூவினன். அதனல், அந்த அறையில் புகை நிறைந்தது. தரும

தத்தன் மூக்கிலும், வாயிலும், கண்ணிலும் புகை ஏறித் தவித்தான்; கண்ணை வெகுநேரம் திறக்கவேயில்லை; புகை சிறிது அடங்கியபின் வாயைத் திறந்தான். அப்போது சந்நியாசி, "மூசையை எடுத்து நெருப்பில் வை," என்றான். அப்படியே தருமதத்தன் செய்தான்.

9. பின்பு, சந்நியாசி வணிகனைப் பார்த்து, "நான் காளிக்குப் பூஜை செய்ய வேண்டும்; இந்த நெருப்பில் உள்ளதை நீ மூன்று நாள் காத்திருக்க வேண்டும்; இந்த அறையை விட்டு வெளி வரக்கூடாது. நான்காம் நாள் நான் வருவேன். அப்போது எடுத்தால்தான் இது அசல் தங்கமாயிருக்கும்" என்று சொல்லிவிட்டுப் போனான். தருமதத்தன் அப்படியே செய்தான். நான்கு நாள் ஆகியும் சந்நியாசி வரவில்லை. ஆகையால், தருமதத்தன் அவனைத் தேடிச்சென்றான்.

10. அவன் காளி கோயிலிலும் அதை யடுத்த பல இடங்களிலும் தேடி அலைந்தான். ஆண்டியைக் காணவில்லை. அப்போது, அவனுக்குச் சிறிது சந்தேகம் உண்டாயிற்று. திரும்பி வீட்டுக்கு ஓடி வந்தான்; நெருப்பில் இருந்த மூசையை எடுத்துப் பார்த்தான். அதில் என்ன இருந்தது? இரும்புதான் இருந்

தது! அதைப் பார்த்த தருமதத்தன், பொத்தென்று கீழே விழுந்து இறந்தான்.

11. வெளிவேஷத்தைக் கண்டு மயங்கிய தருமதத்தன் உயிருக்கே அழிவு வந்தது அல்லவா? ஆதலால், நாம் வேஷத்தைப் பார்த்து எவரையும் நம்பக்கூடாது.

அருஞ்சொற்கள் :

விதம்	**யோகதண்டம்**	**அண்டை**
வெவ்வேறு	**கமண்டலம்**	**சந்நியாசி**
கவர	**சடை**	**மாயாண்டி**
மேன்மை	**உண்டி**	**மூசை**
காவி	**ஆண்டி**	**குமரன்**
பிரம்பு	**புன்சிரிப்பு**	**வேஷம்**
உருத்திராக்ஷம்	**பொத்தி**	**வேஷதாரி**

பயிற்சி :

பிரி :—வெவ்வேறு, நயமாக, குலத்தொழில், யோகதண்டம், பொய்யாண்டி, புன்சிரிப்பு, மாயாண்டி.

கூட்டு ;—மக்கள் அனைவரும், நல்ல எண்ணம்.

எதிர்ப்பதம் எழுது :—பொறுமை, மேன்மை, சிரிப்பு, வெறுப்பு.

ஒரே மொழியில் எழுது :—செல்வம் உடையவன், இறந்துபோயினர், காலில் விழுந்தான், விழியைத் திறந்தான்.

மொழிகளைத் தனித்தனி தொடரில் அமை :—

மேலும் மேலும், கலுக்கென்று, தவித்தான், காத்திருந்தான்.

தடித்த எழுத்துள்ள மொழிக்குப் பதில் வேறு மொழி எழுது :—

1. உருவத்தில் தனித்தனி அமைப்புடையவர்.
2. கெட்ட எண்ணம் உடையவர்கள்.
3. அதைத் தங்கமாக்கித் தருகிறேன்.
4. அவனுக்குச் சிறிது சந்தேகம் உண்டாயிற்று.

கேள்விகள் :


1. நல்ல எண்ணங்கள் எவை?
2. தருமதத்தனுடைய குலத்தொழில் யாது?
3. மேரு, கைலை இவற்றின் வேறு பெயர்கள் யாவை?
4. 'மோசக்காரன் கலுக்கென்று சிரித்தான்.' எப்போது? ஏன்?
5. தருமதத்தன் பொத்தென்று கீழே விழுந்தது எதனல்?

இலக்கணம் :

இப்பாடத்திலிருந்து ஒவ்வொரு வகைப் பெயர்க்கு மும்மூன்று உதாரணம் எடுத்து எழுது :—

எண்	பொருட் பெயர்	இடப் பெயர்	காலப் பெயர்	சினைப் பெயர்	குணப் பெயர்	தொழிற் பெயர்
1						
2						
3						

10. கதைப் படம்-II



படம் பார்த்துக் கதையைச் சொல்; எழுது.

11. காலையும் மாலையும்

1. பகல் பொழுதைக் காலை, நடுப்பகல், மாலை என முப்பிரிவாகப் பிரிக்கலாம். ஆனாலும், சூரியன் உதிப்பதற்கு முன் சிறிது நேரத்தை அதிகாலை என்கிறோம். அதிகாலைக்கு **வைகறை** என்னும் பெயரும் உண்டு. சூரியன் மறையும் நேரத்தைச் சாயுங்காலம் என்கிறோம். அதே சமயத்தைச் சிலர் மாலை என்கின்றனர். சூரியன் மறைந்த பின்பும் சிறிது நேரத்தை மாலை என்பது வழக்கம். ஆகையால், காலை என்பது சூரியன் தோன்றுவதற்குச் சிறிது முன்னும் பின்னும் ஆகும். அப்படியே மாலை என்பதும் சூரியன் மறையும் நேரத்திற்குச் சிறிது முன்னும் பின்னும் ஆகும்.

2. காலை மாலை ஆகிய இரு வேளைகளிலும் உள்ள தோற்றங்களையும், நிகழும் சில செயல்களையும் நாம் நன்கு அறிய வேண்டும் அல்லவா? ஔவையார் '**வைகறைத் துயில் எழு,**' என்றபடி, நாம் விடியற்காலையிலேயே கண் விழிக்கிறோம். அப்போது நாம் விழிக்கத் தவறினாலும், காக்கைகள் 'கா, கா' என்று கரைந்து நம்மை எழுப்புகின்றன. சேவற்கோழிகள் 'கொக்கரக்கோ,' 'கொக்

கரக்கோ’ எனக் கூவி நம்மைத் துயில் எழச் செய்கின்றன. மற்றும் சிறு பறவைகள் ‘கிரீச் சுக் கிரீச்சு’ என்று கத்தி நம்மை எழுப்பு கின்றன. அக்கம்பக்கத்து வீட்டுக்காரர்கள் எழுந்து பேசிக்கொள்வதைக் கேட்டும் நாம் விழித்துக்கொள்ளுகிறோம்.

3. உழவர்கள் அதிகாலையில் தங்கள் வேலையைத் தொடங்குவார்கள். சிலர் தோள் மேல் கலப்பையையும் நுகத்தடியையும் சுமந்து தாற்றுக்கோலைக் கையில் பிடித்து எருதுகளை ஓட்டிக்கொண்டு வயல்களுக்குச் செல்வார்கள். சிலர், ஏற்றம் இறைப்பர்; சிலர் கவலையடிப் பர். அப்போதுதான் பெண்கள், தெருக்க ளுக்குச் சாணம் தெளித்துப் புழுதி போக்கிக் கோலமிட்டு, அழகுபடுத்துவார்கள்.

4. அதிகாலையில் ஆடவர்கள் காலைக் கடன் கழிப்பதற்கு ஆறு, குளம், ஏரி முதலிய இடங்களுக்குச் செல்வார்கள். அந்தச் சமயத் தில் சென்று, குளக்கரையில் இருந்து பார்த் தால், நீரில் முழுகுகிறவரும், ஆடை துவைப் பவரும், பூஜை செய்பவரும், எல்லாவற்றை யும் முடித்துக் கரை ஏறுகிறவரும் ஆகிய பல ரைக் காணலாம். அக்குளம் தாமரையை உடையதாயிருந்தால், அரும்புகள் அழகாக

மலரத் தொடங்குவதையும் பார்க்கலாம். அதே நேரத்தில் கிழக்கில் பார்த்தால், சூரியன் சிவந்த வட்ட வடிவுடன் வெளிப்படுவது தெரியும்.

5. காலைப்பொழுதில் பசுக்களையும், எருமைகளையும் பால் கறப்பார்கள்; பின்னர், அவற்றை மந்தை வெளிக்கு ஓட்டுவார்கள். இடையர்கள் ஆடுகளைப் பட்டியிலிருந்து வெளியே ஓட்டிச் செல்லுவார்கள். தெருக்களில் தயிர், மோர், காய்கறி முதலியவற்றை விற்பவர்கள் கூவிக்கொண்டு வருவார்கள். பெண்கள் குளித்து, அழுக்கில்லாத ஆடை உடுத்துக் குடங்களைத் தாங்கிச் சென்று, நீர் முகந்து வருவார்கள். வியாபாரிகள் கடைகளைத் திறந்து வைப்பார்கள். சிறுவரும் சிறுமியரும் புத்தகம் கையில் எடுத்துக்கொண்டு பள்ளிக்கூடம் போவர்.

6. இனி மாலை வேளையைப் பற்றிக் கவனிப்போம்: பகல் முழுவதும் எரித்த வெயில், மாலையில் குறைந்துவிடும், பள்ளிக்கூடம் சென்ற பாலர்கள் திரும்புவார்கள். உத்தியோகஸ்தர்களும் வீட்டுக்குத் திரும்புவார்கள். ஆடு மாடுகளை மேய்ப்பவர்களும், அவற்றை வீட்டுக்கு ஓட்டி வருவார்கள்.

7. பகலெல்லாம் உடல் வருந்த வேலை செய்த ஆட்கள் கூலி பெற்று வீடு வருவார்கள். அந்தச் சமயத்தில் சூரியனை மேற்கே காண் போம். அது மலையாலும் மேகத்தாலும் மறைக்கப்பட்டிருக்கும். வெயில் மஞ்சள் நிற மாய்க் காயும். மேற்கில் வானம் சிவந்திருக்கும். அப்போதும் பெண்கள் தெருவில் நீர் தெளித் துக் கோலமிடுவார்கள். ஆடப் போயிருந்த பிள்ளைகளும் வீட்டுக்குத் திரும்புவார்கள்.

8. மாலை வேளையில் குளக்கரைக்குச் சென்றால், கை கால் கழுவிப் பூசை செய்கிறவர் களைப் பார்க்கலாம். சூரியன் மறைந்தவுடன் தாமரைப் பூ, தலை சாய்ந்துவிடும். அதன் இதழ் கள் வாடிக் குவிந்து போகும். அல்லி அரும் புகள் அலரத் தயாராகும். நேரம் கழியக் கழிய, வானத்திலே சோளப்பொரி போல நட் சத்திரங்கள் தோன்றும். சந்திரன் உள்ள இரவானால், நிலவு வீசும். அல்லி மலர்கள் அழகாய்த் தோன்றும்.

9. சூரியன் மறைந்த சிறிது நேரத்திற் குள் கோயிலில் மேளம் வாசிப்பார்கள். கோயில் மணி ஓசை 'கணகண' என்று கேட் கும். அதைக் கேட்டுச் சிலர் அவசரமாகக் கோயிலுக்குப் போவர். அப்போதுதான்

வியாபாரிகள் கடைகளை மூடிவிட்டு இல்லம் சேர்வார்கள். வேலைக்காக எங்குச் சென்றவர்களும் தங்கள் தங்கள் வீட்டை அடைவார்கள். பின்பு அனைவரும் உண்டு சிறிது நேரம் களைப்பாறிப் பின் உறங்கச் செல்வர்.

10. காலையில் உழைக்கத் தொடங்குவதும் மாலையில் உழைப்பை நிறுத்தி ஓய்வு கொள்ளத் தொடங்குவதும் மக்கள் கடமை.

அருஞ்சொற்கள் :

முப்பிரிவு	**அக்கம்பக்கம்**	**மேளம்**
வைகறை	**முகந்து**	**இல்லம்**
தோற்றம்	**மாடத்தில்**	**அரும்பு**
நிகழும்	**இதழ்**	**உறங்க**
துயில்	**கோலம்**	**உழைப்பு**
கரைந்து	**அலர**	**ஓய்வு**

பயிற்சி :

பிரி :—முப்பிரிவு, களைப்பாறி, அதிகாலை, இரவானல்.

ஒரே மொழியில் கூறு :—

பிடித்துக்கொண்டு, வேலை செய்து, அழுக்கில்லாத.

எதிர்ப்பதம் எழுது :—

காலை, மறையும், விழிப்பு, தொடங்குதல், ஏறுகிற, மலரும்.

தொடரில் அமை :—

முன்னும் பின்னும், காலை மாலை, கரைந்து, அக்கம் பக்கம், வட்டவடிவு, கழியக்கழிய, கணகணவென்று.

கேள்விகள் :

1. பகலின் பிரிவு எத்தனை ?
2. 'வைகறைத் துயிலெழு,' என்று கூறியவர் யார் ?
3. தாமரை எப்போது மலரும் ? எப்போது குவியும் ?
4. எதைக் கண்டால் அல்லி அலரும் ?
5. மக்கள் ஓய்வு கொள்ளும் நேரம் எது ?

---

12. மௌன வாசிப்பு-II

மனத்திற்குள் படி :—

1. ஒரு காட்டில் தூக்கணங்குருவிகளும் குரங்குகளும் வாழ்ந்து வந்தன. தூக்கணங் குருவி ஒன்று, ஒரு குரங்கினிடம் அதிகமாக நட்புக் கொண்டிருந்தது. தூக்கணங்குருவிகள் எல்லாம் நீண்ட கூடு கட்டும். அக்கூட்டின் அமைப்பை உற்று நோக்கினால், மாடி வீடு போல இருக்கும். எவ்வளவு பெரிய மழை பெய்தாலும் ஒரு துளி நீரும் அக்கூட்டிற்குள் செல்லாது.

2. ஒரு சமயம் விடாத பெருமழை பெய்தது. தூக்கணங்குருவிகள் எல்லாம் கூட்டில் இருந்துகொண்டு மழை பெய்வதைப் பார்த்தன. ஆனால், குரங்குகளோ, மரக்கிளைகளிலும்,

இலைகளின் மறைவிலும், மரப்பொந்துகளி லும், நனைந்துகொண்டு வருந்தி அமர்ந்திருந் தன. அவை குளிரால் உடல் நடுங்கின.

3. அப்பொழுது ஒரு தூக்கணங்குருவி ஒரு குரங்கைப் பார்த்து, "மரத்துக்கு மரம் தாவித் தாவித் திரிந்தாயே. எங்களைப்போல அப்போது கூடு கட்டிக்கொண்டிருந்தால், இந்த மழைக்கு வருந்த வேண்டுவதில்லை அல் லவா?" என்றது. அதனைக் கேட்ட குரங்கு கோபங்கொண்டு தூக்கணங்குருவியின் கூட் டினை அழித்தது.

நீதி :—'துட்டருக்குப் புத்தி சொன்னால் நமக்கே தீமை விளையும்.'

கேள்விகள் :

1. மரங்களில் எவை வசித்து வந்தன?

2. தூக்கணங்குருவிக் கூட்டைப் பற்றி நீ என்ன அறிந்திருக்கிறாய்?

3. குரங்குகள் எங்கே வசிக்கும்?

4. மழை பெய்த பொழுது குரங்குகளின் நிலை யாது?

5. தூக்கணங்குருவி ஒன்று குரங்கினிடம் என்ன கூறிற்று?

6. இக்கதையால் நீ அறியும் நீதி யாது?

8. குரங்கைப் பற்றிய கதை ஒன்று தெரிந்தால் சொல்; எழுது.

இலக்கணம் :

ஒரு பொருளின் தொழிலை அறிவிப்பது வினைச் சொல். 'சூரியன் மறைகிருன்' என்பதில் 'மறைகிருன்' என்பது வினைச்சொல்.

இந்தப் பாடத்திலிருந்து ஐந்து வினைச்சொற்களை எடுத்து எழுது.

---

13. பிருதிவி ராஜன்

1. முன் ஒரு காலத்தில் **பிருதிவி** என்பவன் **டில்லிக்கு** அரசனுய் இருந்தான். அவனே **அஜ்மீரையும்** ஆண்டு வந்தான். அவன் அழகும் ஆண்மையும் உடையவன்; பகைவர்க்குப் பயப்படாத வீரன்; உண்மை தவருத உத்தமன்; மாசற்ற பெருமையுடைய மன்னன்; ஒழுக்கத்தால் உயர்வு அடைந்தவன். அறிஞயும் விளங்கினவன்; கல்வியால் பெருமை பெற்றவன். அவனைக் கருணைக் கடலென்றே சொல்லலாம். அவனுடைய புகழ் வெளி நாடுகளிலும் பரவியிருந்தது.

2. அக்காலத்தில் **கன்னேசியை** ஆண்டவன் **ஜயசந்திரன்.** அவன் பொருமைக் குணமுடையவன். ஜயசந்திரனுக்கும் பிருதிவிக்

கும் உறவு உண்டு. ஆயினும், பிருதிவிமீது ஜயசந்திரன் பகைகொண்டான்; எப்படியும் பிருதிவியோடு போர் செய்யக் கருதினன்; ஆகையால், பல நாட்டு வேந்தர்களை நேசித்தான்; அவர்களுடைய படைத்துணை பெற்றுப் பிருதிவியுடன் சண்டை செய்ய வந்தான். '**கெடுவான் கேடு நினைப்பான்**,' என்றபடி ஜயசந்திரனே தோல்வி அடைந்தான். அவனைப் பிருதிவியின் சேனைத் தலைவர்கள் பிடித்துக் கொண்டுபோய்ச் சிறையில் வைத்தார்கள்.

3. சிறைப்பட்ட ஜயசந்திரனைப் பிருதிவி பார்த்தான்; மனம் உருகினன். 'ஐயோ! பாவம்!' என்று நினைத்து விட்டுவிட்டான். உயிர் தப்பிச் சென்ற கன்னோசி மன்னன் என்ன செய்தான்? உதவிக்குப் பதில் உதவி செய்வதைவிட்டு முன்னிலும் அதிகப் பகைமை கொண்டான்; 'எப்படியாயினும் இந்தப் பிருதிவியை ஒழிப்பேன்!' என்று எண்ணினன்.

4. ஜயசந்திரனுக்கு ஒரு பெண் உண்டு. அவள் மிக்க அழகி; அறிவு நிறைந்தவள்; கல்வியிலும் ஒழுக்கத்திலும் குறைவில்லாதவள். **சம்யுத்தை** என்பது அவளுடைய பெயர். அவளைப் பிருதிவி மணந்துகொள்ள

நினைத்தான். ஆனாலும், எப்படி முடியும்? பிருதிவி தன் அரண்மனையில் உள்ளவர்களிடம் தன் எண்ணத்தைக் கூறினான். அங்கிருந்தவர்களுள் ஒரு தோழி அரசனிடம் வந்தாள். "மன்னரே, நான் சம்யுத்தையை உங்களுக்கு மணம் முடித்து வைப்பேன்," என்று உறுதியாகக் கூறினாள். அதனால் அவன் அகம் மகிழ்ந்தான்.



பிருதிவிராஜனும் சம்யுத்தையும்

5. அந்தத் தோழி, பிருதிவியைப் போலவே தந்தத்தால் ஒரு சிலை செய்தாள். அதை எடுத்துக்கொண்டு நல்ல நாளில் கன்னோசிக்குப் புறப்பட்டாள். அங்கே போய்ச் சம்யுத்தைக்குத் தோழியாய் அமர்ந்தாள். கொஞ்சம்

கொஞ்சமாகப் பிருதிவியைப் பற்றிச் சம்யுத் தையிடம் சொன்னாள்; பின்பு, ஒரு நாள் உருவச் சிலையைக் காட்டினாள். அவன் புகழைக் கேட்டதாலும் உருவைப் பார்த்ததாலும் சம்யுத்தை அவனையே விரும்பினாள்; 'மணந்தால் பிருதிவியைத்தான் மணப்பேன்!' என்று மனவுறுதியும் கொண்டாள்.

6. ஜயசந்திரன் தன் மகளுக்கு மணப் பருவம் வந்ததை அறிந்தான்; அவளது சுயம் வரத்துக்கு ஏற்பாடு செய்தான்; பிருதிவிக் குத் தெரிவிக்கவேயில்லை; அதனோடு நில்லாமல், பிருதிவியைப்போல ஒருருவம் செய்து, மண மண்டபத்தின் வாயிலில் காவலனைப்போல நிறுத்தி, இகழ்ச்சியும் செய்தான். சிலர் இவற்றையெல்லாம் பிருதிவிக்குச் சொல்லினர். உடனே, பிருதிவி கன்னோசிக்கு வந்தான்; தன் உருவை மாற்றிக்கொண்டு வாயிலில் நின்றிருந்தான்.

7. மண மண்டபத்தில் மன்னரனைவரும் குழுமியிருந்தனர். தாதிமார், சம்யுத்தையை அழகு செய்து அழைத்து வந்தனர். ஒவ்வோர் அரசனைப் பற்றியும் அவர்கள் அறிவித்தார்கள். சம்யுத்தை எவரையும் மணக்க விரும்பவில்லை. கையிலிருந்த பூமாலையுடன் விரைந்து

நடந்தாள்; மாலையை வாயிலில் இருந்த காவற் பதுமையின் கழுத்தில் இட்டாள். அதைக் கண்ட ஜயசந்திரனுக்குக் கண்கள் சிவந்தன; மீசைகள் துடித்தன; கைகள் பதறின; பல்லைக் கடித்தான். மற்ற மன்னர்கள் அவமானத்தோடு கோபமும் அடைந்தார்கள்.

8. அதே நேரத்தில், அங்கிருந்த பிருதிவி, சம்யுத்தையைத் தூக்கிக் குதிரைமேல் வைத்துத் தானும் பாய்ந்தேறினுன். அக்குதிரை அதிவேகமாகத் தாவியோடிற்று. ஜயசந்திரன் விடுவானு? படைகளை ஏவிப் பிடிக்கச் செய்தான். பல படைகள் பிருதிவியைப் பின் பற்றிச் சென்றன. காரியம் மாத்திரம் கைகூடவில்லை. போன படைகள் களைத்துத் திரும்பி வந்து கன்னேசியைச் சேர்ந்தன. பிருதிவியும் சம்யுத்தையும் டில்லியை அடைந்தனர்.

9. அங்கே ஒரு நல்ல நாளில் சம்யுத்தைக்கும் பிருதிவிக்கும் சிறப்பாகத் திருமணம் முடிந்தது. இருவரும் அன்புடன் வாழ்ந்தனர்.

அருஞ்சொற்கள் :

ஆண்மை	**அகம் மகிழ்ந்தான்**	**வாயில்**
மாசு	**சிலை**	**காவலன்**

கருணை	**பருவம்**	**இகழ்ச்சி**
அறிஞன்	**ஓலை**	**குழுமி**
தலைவர்	**விரைந்து**	**தாதிமார்**
பதறின	**அவமானம்**	**பதுமை**
தோழி	**மண்டபம்**	**உறுதி**

பயிற்சி :

பிரி :—மாசற்ற, அகமகிழ்ந்தான், அவமானம், கடலென்று.

ஒரே மொழியில் கூறு :—

அழகு உடையவன், அறிவு உள்ளவன், உயர்வு அடைந்தவன், பகை கொண்டவன்.

எதிர் மொழி எழுது :—

நேசித்தான், இகழ்ச்சி, உயர்வு, பகை, தோல்வி.

தொடரில் அமை :—

மாசற்ற, பருவம், அகமகிழ்ந்தான், மணமண்டபம், துடித்தன.

ஓலை—இரு பொருள் கூறு.

தடித்த எழுத்திலுள்ள மொழிக்குப் பதில் வேறு மொழி அமை :—

1. அறிவிலும் சிறந்து விளங்கினன்.
2. பிருதிவியோடு போர் செய்யக் கருதினன்.
3. எவ்லா வேந்தர்களுக்கும் தெரிவித்தான்.
4. யாரையும் சம்யுத்தை மணக்க விரும்பவில்லை.
5. படைகள் பின் பற்றிச் சென்றன.

கேள்விகள் :

1. பிருதிவி ஆண்ட இடங்கள் எவை?
2. ஜயசந்திரன் எந்த நாட்டு மன்னன்?
3. பிருதிவிக்குச் சம்யுத்தையை மணம் செய்து வைக்கத் தோழி என்னென்ன செய்தாள்?
4. சுயம்வரத்தில் மணமாலை யார் கழுத்தில் விழுந்தது?

இலக்கணம் :

'பிருதிவி அஜ்மீரை ஆண்டு வந்தான்,' என்பதில் ஆண்டு என்பதும் வந்தான் என்பதும் வினைச்சொற்கள். வந்தான் என்னும் வினை முடிந்திருக்கிறது. ஆகையால், அது முற்றுவினை. ஆண்டு என்பது குறையாயிருக்கிறது. ஆகையால், அது எச்சவினை.

இப்பாடத்திலிருந்து ஐந்து எச்ச வினைகளும் ஐந்து முற்று வினைகளும் எடுத்து எழுது,

---

14. உண்மையின் உயர்வு

1. முன் காலத்தில் **அரிச்சந்திரன்** என்னும் மன்னன் ஒருவன் இருந்தான். அவன் **அயோத்தி**யைத் தலைநகரமாகக் கொண்டு, **கோசல** நாட்டை ஆண்டவன். அரிச்சந்திரன் கல்வி, அறிவு, அழகு, வீரம், கருணை முதலியவற்றில் சிறந்தவன். அச்சமயத்தில் கன்னோசி நாட்டை **மதிதயன்** என்ற ஒரு மன்னன் ஆண்டான். அவனுக்குச் **சந்திரமதி** என்று

ஒரு மகள் உண்டு. அவளை அரிச்சந்திரன் மணந்திருந்தான். அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. அதற்குத் **தேவதாசன்** எனப் பெயரிட்டு அருமையாக வளர்த்தார்கள். அவர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்திருந்தார்கள்.

2. அரிச்சந்திரனுடைய குலகுரு **வசிஷ்ட முனிவர்.** அவர் அடிக்கடி தேவலோகம் போவார். மற்ற முனிவர்களும் போவது வழக்கம். ஒரு நாள் தேவேந்திரன் சபையில் எல்லாத் தேவர்களும் முனிவர்களும் கூடினார்கள். அப்போது இந்திரன், "பூலோகத்தில் பொய் பேசாத சிறந்த மன்னன் எவன்?" என்று கேட்டார். வசிஷ்டர் எழுந்து, "அரிச்சந்திரனே பொய் பேசாதவரில் சிறந்தவன்," என்றார். ஆனால், விசுவாமித்திரர் எழுந்து, "அரிச்சந்திரன் பொய்யே பேசும் மிகவும் கொடிய மன்னன்," என்றார்.

3. இருவர் சொல்லையும் கேட்ட இந்திரன், "எது மெய்?" என்றான். அப்போது "விசுவாமித்திரருடைய மொழி மெய்யானால், நான் கட்குடம் சுமந்து தெற்கே ஏகுவேன்!" என வசிஷ்டர் சொன்னார். "என் மொழி பொய்யானால், என் தவப்பலனில் பாதியை

அரிச்சந்திரனுக்கு அளிப்பேன் !" என்றார் விசுவாமித்திரர். உடனே சபையும் கலைந்தது.

4. விசுவாமித்திரர் அங்கிருந்து அயோத்திக்கு வந்தார்; அரிச்சந்திரனைக் கண்டார்; "யான் வேள்வி செய்யவேண்டும்; நூறாயிரம் பொன் கொடு," என்றார். அப்படியே கொடுப்பதாக அரிச்சந்திரன் ஒப்புக்கொண்டான். ஆனால், முனிவர், "அப்பொருள் உன்னிடமே இருக்கட்டும்," என்று சொல்லிப் போய்விட்டார். போன முனிவர், யாகத்தால் ஒரு பெரிய பன்றியை உண்டாக்கினார்; அயோத்தி நகரக் குடிகளுடைய பயிரை அழிக்குமாறு கூறி அதை அனுப்பினார். அதனால், மன்னனுக்கும் குடிகளுக்கும் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டன.

5. பின்னும் முனிவர் இரண்டு பெண்களை உண்டு பண்ணினார்; அவர்களுக்கு ஆடலும் பாடலும் கற்பித்தார்; "அரசன் எதிரில் ஆடிப் பாடி அவனைக் களிக்கச் செய்யுங்கள். அப்போது அவன், 'உங்களுக்கு என்ன வேண்டும்?' என வினவுவான். அவனுடைய பூச்சக்கரக் குடையைக் கேளுங்கள். அவன் அதைத் தர மாட்டான். பின்னர், உங்களை மணம் புரிந்து கொள்ள வேண்டுங்கள்," என்று சொல்லி

அனுப்பினர். அவர்கள் சென்று முனிவர் சொற்படி செய்தார்கள். அரசன் ஒப்புக் கொள்ளவில்லை. அதனால், அரசனைப் பெண் கள் இகழ்ந்தார்கள். அரசன் அவர்களை வெளியே தள்ளச் செய்தான்.

6. பெண்கள் அழுதுகொண்டே போய் முனிவரிடம் கூறினர்கள். உடனே முனிவர், கோபத்துடன் அரிச்சந்திரனிடம் வந்தார். "இந்தப் பெண்களை மணந்தால் உன் பிழை களைப் பொறுப்பேன்!" என்றார். அதற்கு மன் னன், "என் நாட்டைக்கேட்டாலும் தருவேன்; இப்பெண்களை விரும்பமாட்டேன்," என்றான். முனிவர், "ஆனால், நாட்டைக் கொடு," என்று கேட்டு வாங்கிக்கொண்டார். பிறருக்குக் கொடுத்த நாட்டில் வாழ்வது தகுதியல்ல; அதனால் அரசன் வேறிடம் போகப் புறப்பட் டான். அவனை முனிவர் தடுத்து, "முன்னே யாகத்துக்குத் தருவதாகக் கூறிய பொருளைக் கொடு," என்றார். சில நாளில் தருவதாகத் தவணை கேட்டான் மன்னன். முனிவர் அப்படியே அளித்து ஒரு தரகனையும் கூட்டி அனுப்பினர்.

7. அரிச்சந்திரனுடன் சென்ற தரகன், அவனைப்படுத்திய பாடு கொஞ்சமன்று. ஆகை

யால், அரசன் தன் மனைவியையும் மகனையும் காசியில் ஒரு மறையவனுக்கு விற்றுப் பணம் கொடுத்தான். தரகன் தனக்குக் கூலி கேட்டான். அதன்பொருட்டுக் காசியில் வீரவாகு என்னும் புலையனுக்குத் தானே அடிமையாகிப் பணம் வாங்கிக் கொடுத்தான். விசுவாமித்திரர் அரிச்சந்திரனை அதனோடும் விட்டுவிடவில்லை. அவன் மகன் தேவதாசனைப் பாம்பு கடிக்கும்படியும், அதனால் அவன் இறக்கும்படியும் செய்தார்.

8. இறந்த மகனைச் சந்திரமதி சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்றாள். சுடுகாடு காத்த அரிச்சந்திரன் முழத்துண்டும் கால் பணமும் அவளைக் கேட்டான். அவற்றை வாங்கிவரச் சந்திரமதி திரும்பிச் சென்றாள். அன்றிரவு காசி மன்னனுடைய மகனைத் திருடர் கொலை செய்து நகைகளைப் பறித்துக்கொண்டு பிணத்தை எறிந்து போனார்கள். சந்திரமதி அம்மைந்தனைத் தன் மகனோ எனப் பார்க்கப் போனாள். அப்போது, அவளைக் காவலர் பிடித்துக் குற்றவாளி என்று அரசனிடம் விட்டனர். அரசன் சினந்து, அவளுக்குக் கொலைத் தண்டனை விதித்தான்; அவளைக் கொலை செய்வதற்கு அரிச்சந்திரனையே ஏவினான். அதற்கும் அரிச்சந்திரன் வருந்தவில்லை.

9. அந்தச் சமயத்தில், விசுவாமித்திரர் அரிச்சந்திரனிடம் வந்தார். "நீ எனக்கு முன்பு கொடுத்த நாட்டைத் தரவில்லை என்று சொன்னால் போதும். இந்தத் துன்பங்களெல்லாம் தொலையும்; பழையபடி எல்லா நன்மைகளையும் அடையலாம்," என்றார். அப்போதும் அரிச்சந்திரன் வாய்மை தவறிவிடவில்லை; தன் மனைவி சந்திரமதியைக் குனியவைத்துக் கூரிய வாளால் வெட்டினான். ஆனால், அது பூமாலையாகச் சந்திரமதியின் கழுத்தில் விழுந்தது. தேவர் அனைவரும் அங்கே வந்து கூடினர்; இறந்த குழந்தைகளையும் உயிர்ப்பித்தனர்; "அரிச்சந்திரனே உலகில் சிறந்தவன்; உண்மை தவறாதவன்," என்று புகழ்ந்தனர்.

10. விசுவாமித்திரர் தாம் முன்னர் வசிஷ்டரிடம் கூறியவாறே தவப்பலனில் பாதியை அரிச்சந்திரனுக்கு அளித்தார். மன்னன் பழையபடியும் நாட்டை ஆண்டு வாழ்ந்தான்.

"வாய்மையே வெற்றி பெறும்."

அருஞ்சொற்கள் :

யாகம்	**இழித்து**	**அடிமை**
குடிகள்	**தவணை**	**முழம்**
வினவுவான்	**தரகன்**	**தொலையும்**
பூச்சக்கரக்குடை	**பாடு**	**வாய்மை**

பயிற்சி :

குலகுரு, சொற்படி, தருவதாக—பிரித்து எழுது.

கொலை செய்து—ஒரே சொல்லாக்கு.

ஆண்டான்—இரு மொழியால் கூறு.

போவது, கூடினார்கள், நஷ்டம்—எதிர்ப்பதம் எழுது.

ஆடு, மணம்—இரண்டு அர்த்தம் எழுது.

கூறிய, கூரிய—பொருள் எழுது.

அருமையாக, வழக்கம், படுத்திய பாடு, கஷ்டமும் நஷ்டமும்—ஒவ்வொரு தொடரில் அமைத்து எழுது.

தொடரை முடி :

1. மதிதயன் கன்னோசி நாட்டை——.
2. பன்றி குடிகளின் பயிரை——.
3. வாள் பூமாலையாகச் சந்திரமதியின் கழுத்தில் ——.

அரிச்சந்திரனைத் தரகன் துன்பப்படுத்தினான்—இத் தொடரில் அரிச்சந்திரனை என்பதை 'அரிச்சந்திரன்' என வைத்து, தொடரைத் தகுந்தவாறு மாற்றி எழுது.

கேள்விகள் :

1. கோசல நாட்டின் தலை நகரம் எது ?

2. விசுவாமித்திரர் அரிச்சந்திரனுக்கு என்னென்ன துன்பங்களை உண்டாக்கினார் ?

3. தரகனுக்கு அரிச்சந்திரன் எப்படிப் பணம் தந்தான் ?

இலக்கணம் :

வாழ்ந்து இருந்தார்கள்—இதில் வாழ்ந்து எச்சவினை கேட்ட இந்திரன்—இதில் கேட்ட எச்சவினை. ஆனால்,

வாழ்ந்து என்னும் எச்சவினை இருந்தார்கள் என்னும் வினைச்சொல்லைக் கொண்டு முடிகிறது; ஆகையால், 'வாழ்ந்து' என்பது வினை எச்சம். கேட்ட என்னும் எச்ச வினை இந்திரன் என்னும் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிகிறது. ஆகையால், 'கேட்ட' என்பது பெயரெச்சம்.

கீழுள்ளவற்றுள் பெயரெச்ச வினையெச்சங்களைப் பிரித்து எழுது :—

	பெயரெச்சம்	வினையெச்சம்
போவது வழக்கம்		
என்று கேட்டான்		
சொல்லிப் போனார்		
கூறிய பொருள்		

15. கைத்தொழில்

கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்;
கவலை உனக்கில்லை ஒத்துக்கொள்
எத்தொழில் எதுவும் தெரியாமல்
இருந்திடல் உனக்கே சரியாமோ? 1

உழவும் தொழிலும் இல்லாமல்
உலகில் ஒன்றும் நடவாது;
விழவும் கலையும் விருந்துகளும்
வேறுள இன்பமும் இருந்திடுமோ? 2

நெசவுக் காரர்கள் நெய்யாமல்
நிலத்தவர் உடைக்கென் செய்திடுவார்?
குசவன் செய்திடும் பாண்டமன்றோ
குடித்தனம் நடத்திட வேண்டுமென்றும்? 3

கொல்லரும் தச்சரும் கூடாமல்
　　கூடமும் மாடமும் வீடாமோ?
கல்லடி சிற்பியும் தச்சருமே
　　காரியம் பலவினுக் கச்சாணி. 4

சலவை சவரம் செய்தாலும்,
　　சாக்கடை கழுவுதல் செய்தாலும்,
உலகுக் கதனுல் உபகாரம்
　　ஒன்றும் தெரியார் வெறும்பாரம். 5

ஏழை செல்வன் என்றுவரும்
　　எல்லாப் பிணக்கும் நின்றுவிடும்;
வாழிய வாழிய கைத்தொழில்கள்!
　　வாழிய நித்திய சத்தியமும்! 6

—ஆஸ்தான கவிஞர்
நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை

குறிப்புரை:

1. கைத்தொழில் - கையால் செய்யப்படும் வேலை.

2. விழவு - திருவிழா, கலை - சாத்திரம்.

3. உடை - ஆடை, குடித்தனம் - குடும்பம் நடத்தல்.

4. மாடம் - மாடி, கல் அடி சிற்பி - கல்லில் உருவங்கள் செதுக்குபவன், அச்சாணி - கடையாணி போன்றவர் (ஆதாரமானவர்).

5. பாரம் - சுமை.

6. பிணக்கு - சண்டை, வாழிய - வாழ்க, நித்தியம் - அழியாதது.

பயிற்சி:

ஒவ்வொரு பாட்டையும் படி, அதில் கூறியுள்ளதை எழுது.

16. மண் எண்ணெய்

1. 'எண்ணெய்' என்னும் பொருள் யாருக்கும் தெரியும், (எள்+நெய்=எண்ணெய்) எள் என்பது ஒரு வகைத் தானியம். நெய் என்பது தைலம். எள்ளாகிய தானியத்திலிருந்து எடுக்கப்படும் தைலம் என்பது அர்த்தம். இதுதான் நம் நாட்டில் முதல் முதல் இருந்து வந்தது. ஆதலால், மற்ற விதைகளில் இருந்து எடுக்கப்படும் தைலங்களுக்கும் எண்ணெய் என்றே வழங்குகிறது. எண்ணெய் நம் நாட்டவர்களுக்குப் பல வகையிலும் உபயோகமாகிறது.

2. முன் கால விளக்குகள் **எள், ஆமணக்கு, இலுப்பை, தேங்காய், மணிலா, வேம்பு** முதலிய விதைகளிலிருந்து எடுக்கப்பட்ட நெய்களால் எரிக்கப்பட்டன. அவற்றுள்ளும், ஆமணக்கு வித்திலிருந்து கிடைக்கும் நெய் தான் விளக்குக்கு மிகவும் பயன்பட்டது. ஆகையாலேதான், அதை விளக்கெண்ணெய் என்று கூறும் வழக்கம் உண்டாயிற்று. மெழுகு வர்த்தியும் தேங்காய் நெய், மணிலா நெய் முதலியவற்றுலேதான் செய்யப்படுகிறது. சில மிருகங்களின் கொழுப்பாலும் மெழுகு வர்த்தி செய்யப்படுவதாகத் தெரிகிறது.

3. அறுபது, எழுபது ஆண்டுகளாக நம் நாட்டில் **மண் எண்ணெய்**, என ஒன்று பயன் படுத்தப்படுகிறது. அதை ஆங்கிலத்தில் **'கெரோசின்'** என்பார்கள். அது எப்படிக் கிடைக்கிறது, எங்கிருந்து கிடைக்கிறது என நாம் அறிந்துகொள்ள வேண்டும் அல்லவா?

4. நம் வீடுகளில் அடுப்பெரியும்போது, எரியும் கட்டைகளைக் கவனியுங்கள். எரியும் முனைக்கு எதிர் முனையில் ஒரு விதத் தைலம் கசிவதை நாம் பார்க்கிறோம். அந்த **மர எண் ணெய்**தான் நமக்கு மண் எண்ணெயாகக் கிடைக்கிறது. மர எண்ணெயை ஏன் மண் எண்ணெய் என்கிறோம்? மண்ணில் இருந்து எடுக்கப்படுவதால் மண் எண்ணெய் எனக் கூறுகிறோம். பூமியில் தண்ணீர் எடுக்கக் கிணறுகள் தோண்டுகிறோம் அல்லவா? அது போலவே, மண் எண்ணெய் எடுக்கும் கிணறு களும் நிலத்தில் தோண்டப்படுகின்றன. அந் தக் கிணறுகளில் இந்த எண்ணெய் சுரக்கும். இதை முகந்து, வடிகட்டிச் சுத்தப்படுத்தி, விளக்கு எரிக்கப் பயன்படுத்துகிறோம்.

5. இந்த எண்ணெய், தரையில் எப்படி உண்டாயிற்று, தெரியுமா? இக்காலத்தில் நிலத்தின்மீது காடுகள் உண்டல்லவா? இப்

படியே முன்காலத்திலும் அங்கங்கே காடுகள் இருந்தன. உலகத்தில் அடிக்கடி பூகம்பம், புயற்காற்று, மண் மழை முதலியன உண்டாவதும், அப்போது மரங்கள் பல முறிந்து சாய்வதும், சாய்ந்த மரங்கள் நாளடைவில் மண்ணில் புதைபடுவதும், நாளாக நாளாக, மேலும் மேலும் மண் மூடுவதும் உண்டு அன்றோ? அப்போது மண்ணெல்லாம் சேர்ந்து அடியில் அகப்பட்டுள்ள மரங்களை அழுத்தும் அல்லவா? அதனால், மரத்திலுள்ள தைலம் கசிந்து மண்ணுடன் கலந்து இருக்கும்.

6. அப்படிப்பட்ட நிலத்தில் கிணறுகள் தோண்டினால் எண்ணெய் ஊறும். மண்ணெண்ணெய் ஊற்றுக்கள் **பர்மா, அமெரிக்கா, ருஷியா** முதலிய தேசங்களில் உண்டு. இதை முதல் முதலில் அமெரிக்கர்கள் கண்டு பிடித்தார்கள். அவர்கள் இதை உடலில் பூசிக் கொள்வது வழக்கம். பூசிக்கொண்டால் மலைச் சுரம், சொறி சிரங்கு முதலிய நோய்கள் வருவதில்லை. பின்பு **சாமுவேல் எம்கீர்** என்பவர் மண்ணெண்ணெய் விளக்கெரிக்க உதவும் என்பதைக் கண்டு பிடித்தார். அவர் சீமையிலிருந்து அமெரிக்காவுக்குச் சென்றார்.

7. **கர்னல் டிரேக்கு** என்பவ...
மண்ணெண்ணெய்க் கிணறு வெ...
டது. அதனால், அவர் மிகுந்த லாபம் அ...
தார். அதைக் கண்டு, பலரும் வெட்ட...
தொடங்கினர்.

8. மண்ணெண்ணெயால் விளக்கு எரிப்பது இலாபமானது; விலையுங் குறைவு; விரைவில் தீப்பற்றுவதோடு மிகுந்த வெளிச்சமும் தரும்.

அருஞ்சொற்கள் :

வித்து	**கசிவது**	**முறிந்து**
கொழுப்பு	**சுரக்கும்**	**புதைபட்டன**
மெழுகு வர்த்தி	**முகந்து**	**அழுத்தும்**
கெரோசின்	**பூகம்பம்**	**ஊறும்**
தைலம்	**புயற்காற்று**	**சொறி சிரங்கு**

பயிற்சி :

அங்கங்கே, வித்திலிருந்து—பிரித்து எழுது.

முதல் முதல்—ஒரே சொல்லாகக் கூறு.

முகந்து, கசியும், முறிந்து—ஒவ்வொரு தொடரில் ஒவ்வொரு மொழியை அமைத்து எழுது.

தடித்த எழுத்துள்ள மொழியை நீக்கி, அதற்குப் பதில் வேறு மொழியை அமை :—

1. கிணற்றில் நீர் **ஊறும்**.
2. தரையில் எப்படி உண்டாயிற்று ?

ககர் மண் எண்ணெயை உடலில் பூசிக் ழக்கம்.

ல் டிரேக்கு என்பவரால் மண்ணெண்ணெய்க் து தோண்டப்பட்டது.—இத்தொடரைக் கர்னல் ரேக்கு என்பவர் எனத் தொடங்கித் தக்கபடி மாற்றி அமை.

கேள்விகள் :

1. பூமியிலிருந்து மண் எண்ணெய் கிடைப்பதற்குக் காரணம் யாது?

2. மண் எண்ணெய்க்கு ஆங்கிலப் பெயர் யாது?

3. மண் எண்ணெய் விளக்கு எரிக்க உதவும் என்பதைக் கண்டு பிடித்தவர் யார்?


இலக்கணம் :

'இராமன் எண்ணெய் வாங்கினான்,' என்பதில் இராமன், எண்ணெய் இரண்டும் பெயர்ச்சொற்கள். ஆனால், இராமன் மனிதன் பெயர்: எண்ணெய் ஒரு பொருளின் பெயர். மனிதர் பெயரும், தேவர் பெயரும் உயர்திணைப் பெயர். மற்றப் பொருள்களின் பெயர் அஃறிணைப் பெயர்.

இப்பாடத்திலிருந்து ஐந்து உயர்திணைப் பெயர்களும், ஐந்து அஃறிணைப் பெயர்களும் எடுத்து எழுது.

கந்தன், வள்ளி என்னும் இரண்டு சொற்களில் கந்தன் என்பது ஆண் பெயர்; அது ஆண்பால் எனப்படும். வள்ளி என்பது பெண் பெயர்; அது பெண்பால் எனப்படும்.

17. கதைப் பட



படம் பார்த்துக் கதையைச் சொல்; எழுது.

18. குமண வள்ளல்

1. தென்னிந்தியாவில் **கொங்கு நாடு** என்பது ஒரு பிரிவு. அதற்குள் **குமண நாடு** என்பது ஒன்று. அதை ஆண்ட மன்னனுக்குக் **குமண மன்னன்** என்பது பெயர். அவன் கல்வியில் வல்லவன்; அறிவு நிறைந்தவன்; ஒழுக்கமுடையவன்; இல்லை என்று கேட்பவர்களுக்கு இல்லை என்று சொல்லமாட்டான். ஆகையால், புலவர்கள் அவனைப் புகழ்ந்து பாடிச் செல்வார்கள். அவர்களுக்கெல்லாம் அம்மன்னன் அளவில்லாத பொருள் அளிப்பான்.

2. ஓர் அளவின்றி வழங்குகிறவனை **வள்ளல்** என்பர் அல்லவா? ஆதலால், அவ்வரசன் குமண வள்ளல் எனப் பலராலும் புகழப் பட்டான். குமண மன்னனுக்கு ஒரு தம்பி உண்டு. அவனும் அண்ணனைப் போலவே நல்லவன்; கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியவற்றில் சிறந்தவன். ஆனல், இளையவன் தீயர்களுடன் நேசம் செய்தான். அதனல், அவனுடைய அறிவும் ஒழுக்கமும் கெட்டன. அதன் பின், கல்வியும் குப்பையில் புதைபட்ட மாணிக்கமாயிற்று.

3. தம்பி அண்ணனுக்கு நாட்டிலுள்ள புகழைக் கண்டு பொருமை கொண்டான். அண்ணனிடம் ஏழைகள் பரிசு பெற்றுக் களித்து வாழ்வதை அறிந்து சிறியவன் சீறினன். அவன் மனம் கொதித்தது. 'பண மெல்லாம் பாழாகிறதே!' எனப் பதைத்தான்; அண்ணனை இகழ்ந்து பேசத் துணிந்தான். அரசைத்தான் கைப்பற்றவும் துணிவு கொண் டான். ஆகையால், அவனைப் பலரும் வெறுத்து **அமணன்** என்று வழங்கத் தொடங்கினர்.

4. அமணன் முடிவில் என்ன செய்தான் தெரியுமா? அண்ணனை நேரில் கண்டான்; சிறிதும் மரியாதை இன்றிப் பேசத் துணிந் தான்; "அண்ணு, நீ செய்யும் காரியம் எனக் குச் சிறிதும் பிடிக்கவில்லை. தேடாதே அழிக் கிருய்; அதனல் உன் வாழ்க்கை பாடாய் முடியும். ஆலமரத்தில் பழுக்கும் காலம் மாறி விட்டால், பறவை ஒன்றேனும் வருவதில்லை. ஏரியில் நீர் அற்ருல், புட்கள் வேறிடம் போய் விடும். அது போல உன் செல்வமெல்லாம் செலவாய்விட்டால், யாரும் உன்னிடம் வர மாட்டார். ஆகையால், இனிக் கொடையை நிறுத்த வேண்டும்," என்ருன்.

5. இவற்றையெல்லாம் கேட்ட குமணன் உடல் நடுங்கியது. "தம்பீ, இறைக்கும்

ணறு சுரக்கும். மேகம் குடித்தாலும் கடல் ர் வற்றாது; கொடையிற் சிறந்தவர் என்றும் ஏழையாகார். கொடையை நிறுத்திக் கொற்றவனாக வாழ்வதெப்படி? அது முடியாத காரியம்,” என்று பொறுமையோடு கூறினான். பொறுமை கலந்த நயமொழி அமணனிடம் செல்லவில்லை. “முடியாதா? ஆனால், அரசை என்னிடம் தந்துவிடு,” என்றான். அதனால் குமணன் சிறிதும் கவலையடையவில்லை; அன்புடன் தம்பியைப் பார்த்து, “தம்பி, தடையென்ன? உன் விருப்பப்படி இதோ பெற்றுக்கொள்,” எனச் சொல்லி, நல்ல நாளில் முடியும் சூட்டி மகிழ்ந்தான். தம்பி அதனோடு நிற்கவில்லை; அண்ணனைக் காட்டுக்கு ஏகுமாறும் கட்டளை இட்டான்.

6. நற்புத்தியில்லாத தம்பியுடன் நாட்டில் வாழ்வதைக்காட்டிலும் வனத்தில் வாழ்வதே நலம் என்று குமணனுக்குத் தோன்றியது. ஆதலால், அவன் உடனே காட்டுக்குப் போய்விட்டான். செங்கோல் மன்னனைக் காட்டிற்கு ஓட்டிய அமணனைக் குடிகள் வெறுத்தார்கள். அதைக் கண்ட அமணன், “திரும்பவும் குமணனையே அரசனாக்கக் குடிகள் முயற்சி செய்வார்கள்; அதற்குள் அவனைக் கொன்று

விட வேண்டும்," என்று நினைத்தான். உடனே குமணன் தலையை வெட்டி வந்து தருகிறவனுக்கு ஆயிரம் பொன் அளிப்பதாகப் பறை சாற்றுவித்தான்; அதைக் குமணனும் அறிந்தான்; ஆயினும் வருந்தவில்லை.

7. அச்சமயத்தில் **பெருந்தலைச் சாத்தனார்** என்னும் புலவர் குமணனை நாடி வந்தார்; அவன் காட்டில் இருப்பதைக் கேள்விபட்டார்; 'அங்கேயாவது போய் இரக்கலாம்', என எண்ணிச் சென்றார். அரசிழந்து காட்டில் இருந்தவனிடத்தில் தமது குறையைக் கூறினார். வறுமை மிக்க புலவரைக் கண்ட புரவலன் மனம் புழுங்கினான்; கண்ணீர் விட்டான்; "கவிவாணரே, நான் இருந்தும் இறந்தவனானேன்; இப்போது என் தலையை வெட்டிச் சென்று என் தம்பியிடம் கொடும்; ஆயிரம் பொன் கிடைக்கும்," என்றான்.

8. கற்றவர் மற்றவரை வருத்துவதும் உண்டோ? சாத்தனார் திரும்பிச் சென்றார்; ஒரு சிற்பியை நண்ணினார்; குமணன் தலை போல ஓர் உருச் செய்து தர வேண்டினார். அவனும் அப்படியே செய்து உதவினான். கவிவாணர் அதை எடுத்துச் சென்று அமணனுக்குக் காட்டினார். அதைக் கண்டான் அமணன்,

வன் உடல் நடுங்கியது; உள்ளம் உருகியது; ண்கள் கலங்கின; கால்களும் கைகளும் அசைந்தன; வாய், "அண்ணா, அண்ணா!" என்று அலறியது. அமணன் பித்தனைப் போலானான்; அரியாசனத்தை விட்டு எழுந்து ஓடினான்; புலவர் கையிலிருந்த வாளைப் பிடுங்கினான்; "என் சிரத்தையும் வெட்ட வேண்டும்," என்று கத்தியை ஓங்கினான்.

9. பெருந்தலைச் சாத்தனார் அமணன் கையைப் பற்றிக்கொண்டார். "அரசனே, உன் அண்ணன் சாகவில்லை; இது பொய்த்தலை. வா; அவன் வாழும் வனத்திற்குச் செல்வோம்," எனக் கூட்டிச் சென்று, அரசனைக் காட்டினார். அண்ணனைக் கண்ட தம்பி அவன் அடிகளில் விழுந்தான்; தான் அறியாமையால் செய்த பிழைகளைப் பொறுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான்; நாட்டுக்கு வருமாறு அழைத்தான்.

10. அண்ணன் தம்பியின் அன்பைக் கண்டு களித்தான்; அவன் விரும்பியபடி நாட்டை அடைந்தான். அமணன் மீண்டும் அரசைத் தமையனிடம் ஒப்புவித்து ஒற்றுமையாய் வாழ்ந்தான். வேற்றுமையை ஒழித்து ஒற்றுமைப்படுத்திய புலவர் பெரும்பரிசு பெற்றார்.

அருஞ்சொற்கள் :

வள்ளல்	புட்கள்	கொடுங்கோல்
வல்லவன்	கொடை	புழுங்கினன்
மாணிக்கம்	வற்றுது	சிற்பி
பரிசு	கொற்றவன்	நண்ணி
கைப்பற்ற	தடை	அலறி
துணிவு	கட்டளை	பித்தன்
தேடாது	செங்கோல்	அரியாசனம்
அற்றல்	ஆயிரம்	வளம்

பயிற்சி :

செங்கோல், கொடுங்கோல்—பிரித்து எழுது.

நேசம் செய்தான், துணிவு கொண்டான்—ஒரே மொழி யாக்கு.

களித்து, இகழ்ந்தது—இருமொழிகளால் விளக்கிக் கூறு.

முடி, முயல்—இரண்டு அர்த்தம் எழுது.

சிற்பி—விளக்கி எழுது.

தலை, காடு—இவற்றிற்கு வேறு பெயர்கள் கூறு.

வேற்றுமை—எதிர் மொழி எழுது.

ஒவ்வொரு தொடரில் ஒவ்வொரு சொல்லைக் கூட்டு :—
அலறியது, மீண்டும்.

கேள்விகள் :

1. குமணன் நாடு எங்குள்ளது ?
2. குடிகள் அமணனை ஏன் வெறுத்தார்கள் ?

3. காட்டில் இருந்த குமணன், புலவருக்குப் பொருள் கிடைக்குமாறு கூறிய வழி யாது?

4. குமணன் கதையால் நாம் அறியும் நீதிகள் யாவை?

இலக்கணம் :

மன்னன் என்பது ஒருவனைக் குறிக்கிறது.

மன்னர் என்பது பலரைக் குறிக்கிறது.

இப்படி ஒன்றைக் குறிப்பது ஒருமை எனப்படும்.

ஒன்றுக்கு மேற்பட்டதைக் குறிப்பது பன்மை எனப்படும்.

ஒருமை, பன்மை என்பவை எண்ணின் வகை.

ஒருமை, பன்மைகளை எடுத்து எழுது :—


மன்னனுக்குத் தம்பி உண்டு.
தம்பி தீயவரை நேசித்தான்.
ஏழைகளுக்குப் பரிசு தந்தான்.
கொடுங்கோலனைக் குடிகள் வெறுத்தார்கள்.

ஒருமை	பன்மை

19. பஞ்சும் பயனும்

1. மக்கள் ஆடையை விரும்புகின்ற கள். ஆடை நான்கு வகைப்படும். அவை நூலாடை, பட்டாடை, மயிராடை, நாராடை என்பன. இக்காலத்தில் தோல், இரப்பர் முதலியவற்ருலும் சிற்சில ஆடைகள் அமைக்கப்படுகின்றன, இவற்றுள் நூலாடையைத்தான் ஏழை முதல் பணக்காரர் வரையில் பெரும்பாலும் பயன்படுத்துகிருர் கள். நூல் எதனுல் செய்யப்படுகிறது? பஞ்சினுல் நூற்கப்படுகிறது. நூலுக்கேற்ற பஞ்சு எங்கிருந்து கிடைக்கிறது? தாவரத்திலிருந்து கிடைக்கிறது. தாவரத்தில் பருத்தி என்பது ஒரு வகை. அதில் செடி, மரம் என இரு பிரிவு உண்டு. அன்றியும், **அமெரிக்கன் பருத்தி, கம்போடியாப் பருத்தி, நாட்டுப் பருத்தி** எனப் பல விதம் உண்டு. பருத்திக் காய்க்குள் பஞ்சும் கொட்டையும் நிறைந்திருக்கும். பஞ்சின் நிறம் வெண்மை.

2. பருத்திச் செடி, நம் பாரத நாட்டில் அளவின்றிப் பயிரிடப்படுகின்றது. சென்னை இராச்சியத்தில் திருநெல்வேலி, இராமநாதபுரம், கோயம்புத்தூர் முதலிய ஜில்லாக்களிலும், ஆந்திர இராச்சியத்தில் கடப்பை, கர்நூல், கிருஷ்ண, கோதாவிரி முதலிய ஜில்லாக்


2
5
3
4
A D Shanmugam

களிலும், அவற்றையடுத்த சிலவிடங்களிலும் குஜராத்திலும், பம்பாய், பீஹார் முதலிய இராச்சியங்களிலும் பருத்தி விளைகிறது. மரப் பருத்தி சீனத் தேசத்திலும் நம் நாட்டிலும் உண்டு. இந்த மரம் பல வருஷம் பட்டுப் போகாமல் இருந்து, ஆண்டுதோறும் பலன் தரும். அமெரிக்கன் பருத்தியின் பஞ்சு இயந்திர நெசவுக்குத் தகுந்தது. அதன் நூல் மிக நயமானது. கம்போடியாப் பருத்திப் பஞ்சு மிக நீளமான நூல் நூற்கத் தக்கது; நெசவுக்கும் மிகப் பொருத்தமானது. நாட்டுப் பருத்தி என்பது நமது தேசத்தில் பயிரிடப் படுவதேயாகும்.

3. பருத்திச் செடி, புன்செய் நிலத்தில் பயிரிடப்படும். கரிசல் நிலமாயிருத்தல் மிக நல்லது. மழை அதிகம் வேண்டும் என்ற அவசியம் பருத்திக்கு இல்லை. ஆடிப் பட்டத்தில் புழுதியுழுது, ஆட்டுச்சாணம், மாட்டுச்சாணம், ஆமணக்குப் பிண்ணாக்கு, எலும்பு எரு முதலியவற்றைத் தூவி, நிலத்தைச் செழிப்பாக்குவார்கள். பின்பு, சுமார் நான்கு அடிக்கு ஒன்றாகச் சிறு சிறு குழிபறித்து, ஒரு குழிக்கு இரு விதையாகப் போட்டு மண் கொண்டு மறைப்பார்கள். மழை நீரிலேயே விதை முளைத்து

விடும். அதற்கென்று நீரை விட வேண்டிய வேலையில்லை. மாதத்திற்கு ஒரு முறையாக இரண்டு மூன்று மழை பெய்துகொண்டிருந் தால், செடி செழிப்பாக வளர்ந்து வரும். அப் போது செடியையடுத்தும், குழியிலும் உள்ள களைகளைப் பிடுங்கி எறிய வேண்டும். சில தினங்களில் செடி அரும்பு விட்டு மலரும். அதன் மலர் மஞ்சள் நிறமானது. பூ உதிர்ந்து பிஞ்சு தோன்றிப் பருத்துக் காயாகும். அதன் காய் பச்சை நிறமானது.

4. பருத்திக் காய்கள் நன்ருக முற்றின போது வெடித்துவிடும். வெடித்துப் பிளவு பட்ட காயில் வெள்ளை நிறமான பஞ்சு வெளிப்படும். அப்பஞ்சு காற்றில் சிதறிப் பறந்து நிலத்தில் விழுவது உண்டு. அக்காலத் தில் அத்தோட்டச் சொந்தக்காரரும் கூலிக் காரருமாக அவற்றைப் பறித்தும், பொறுக்கி யும் கூடைகளில் மொத்தமாகச் சேர்ப்பார்கள். பின்பு வீட்டிற்குக் கொண்டு போய்க் கொட் டையை வேருக்குவார்கள். பஞ்சையும் கொட்டையையும் பிரிக்க ஒரு பழைய கருவி உண்டு. அதன் பெயர் மணே. ஆனுல், இக் காலத்தில் இயந்திரங்களே அவ்வேலையையும் செய்து முடிக்கின்றன. கொட்டை நீக்கிய

பஞ்சைச் **சிப்பம்** சிப்பமாகச் செய்வார்கள். அதையே வில்லால் அடித்துப் பட்டையாக்கு வதும் உண்டு. பட்டையிலிருந்து நூல் நூற் பார்கள்.

5. முன் காலத்தில் நம் நாட்டில் நூற் கும் தொழிலும் நெய்யும் தொழிலும் செய்யப் பட்டன. கைராட்டினங்களால் நூற்று, கைத் தறிகளால் நெய்வது அக்காலத்து வழக்கம். இக்காலத்திலோ, எல்லாவற்றையும் இயந்தி ரங்கள் செய்து முடிக்கின்றன. ஆனால், வரவர மக்கள் புத்துணர்ச்சி பெற்று வருகின்றனர். அதுதான் கதர் உடுத்தல். கையால் நூற்று, கையால் நெய்த ஆடைக்குக் **கதர்** என்பது பெயர். நாளடைவில் கதராடை விருத்தி அடைந்து வருகிறது. நயமான நூலால், மெல்லிய துணியாக, அழகிய கரைகளுடன் நெய்யப்பட்டால், அதையே அனைவரும் விரும்பி உடுத்துவார்கள்.

6. நம் நாட்டு மக்கள் பருத்தியைப் பயி ரிடுவதிலும், நூல் நூற்பதிலும், துணி நெய் வதிலும் ஊக்கம் கொண்டு உழைத்தால், மிகுந்த இலாபம் கிடைக்கும். நம் நாட்டுப் பணம், அயல் நாட்டாருக்குப் போகாமல் நம் மவர்களிடையே இருக்க இது வெகு நல்ல முறையாகும்.

அருஞ்சொற்கள் :

பஞ்சு	நன்செய்	சிப்பம்
ஆடை	புன்செய்	பட்டம்
சிற்சில	ஆமணக்கு	நூற்றல்
தோல்	தூவி	கைராட்டினம்
பருத்தி	களை	புத்துணர்ச்சி
மாகாணம்	அலர்	மெல்லிய
யாண்டு	உதிர்ந்தது	தனம்
பட்டுப்போதல்	சிதறி	சீர் தூக்கி
இயந்திரம்	கருவி	நிகர்
நெசவு	மணை	கரை

பயிற்சி :

வகைப்படும்—பிரித்து எழுது.

பொருத்தமானது—ஒரு சொல்லாகக் கூறு.

களை, களைதல்—விளக்கி எழுது.

ஒவ்வொன்றை ஒவ்வொரு தொடரில் அமை :—

சிற்பம், நூற்கும், வரவர, உடுத்து.

தடித்த எழுத்திலுள்ள மொழிக்கு மாற்று மொழி அமை :—

1. பஞ்சை வீட்டிற்குக் கொண்டு போவார்கள்.
2. எல்லா வேலைகளையும் இயந்திரமே செய்கிறது.
3. நம் நாட்டில் நூற்கும் தொழிலும் நடந்தது.

கேள்விகள் :

1. பஞ்சு எப்படிக் கிடைக்கிறது?
2. நம் நாட்டில் பஞ்சு விளையும் இடங்கள் எவை?
3. அமெரிக்கன் பஞ்சைப்பற்றி உனக்கென்ன தெரியும்?

இலக்கணம் :

நான் என்பது பேசுகிறவன், தன்னைக் குறிக்கும் சொல். இது தன்மைச் சொல்.

நீ என்பது எதிரே இருப்பவனைக் குறிக்கும் சொல்; இது முன்னிலைச் சொல்.

அவன் என்பது தன்மை முன்னிலையல்லாத வேறு ஒருவனைக் குறிக்கும் சொல். இது படர்க்கைச் சொல்.

பின் வரும் தொடர்களில் உள்ள தன்மை, முன்னிலை, படர்க்கைச் சொற்களை எடுத்து எழுது :—

1. அவர்கள் ஆடையை விரும்புகிறார்கள்.
2. நான் கையால் நூல் நூற்பேன்.
3. நீயும் நானும் இவ்வேலையைச் செய்யலாமா?
4. அவன் நன்றாய் நூற்பான்.

தன்மை	முன்னிலை	படர்க்கை.

20. மௌன வாசிப்பு-III

மனத்திற்குள் படி :—

ஒரு சிற்றூரில் செம்படவன் ஒருவன் இருந்தான். அவன் நாள்தோறும் ஏரி குளங்களுக்குச் சென்று மீன் பிடிப்பது வழக்கம். ஒரு நாள் அவனிடம் ஒரு சிறு மீன் அகப்பட்டது. அந்தச் சிறு மீன் அவனைப் பார்த்து, "நான் மிகச் சிறியேன்; உன் உணவுக்குச் சிறிதும் பற்றேன். என்னை விட்டுவிட்டால் நான் வளர்ந்து பெரிய மீன் ஆவேன். அப்பொழுது நீ என்னைப் பிடித்துக்கொள்ளலாம். நானும் உனக்குப் போதுமான உணவு ஆவேன்,'' என்றது.

அதனைக் கேட்ட அச்செம்படவன், "நல்லது. நீ கூறுவது சரியே. நான் உன்னை விட்டு விட்டால், நீயும் வளர்ந்து பெரியது ஆவாய். ஆனால், நீ திரும்பவும் என்னால் பிடிக்கப்படுவாய் என்பது என்ன நிச்சயம்?'' என்று அந்த மீனைத் தன் வீட்டிற்கு எடுத்துச் சென்றான்.

"இருப்பதை விட்டுப் பறப்பதைப் பிடிக்கலாமா?'

—பழமொழி.

கேள்விகள் :

1. செம்படவனின் தொழில் யாது?

2. சிறுமீன் செம்படவனை நோக்கி என்ன கூறியது?

3. செம்படவன் மீனுக்கு என்ன பதில் கூறினான்?

4. இக்கதையால் நீ அறியும் நீதி யாது?

பயிற்சி :

1. ஏரி, குளம்—இவற்றின் வேற்றுமை என்ன?

2. எங்கெங்கு மீன் பிடிப்பார்கள்?

3. நீரில் வாழும் உயிர்ப் பிராணிகள் யாவை?

4. மீன், முதலை, திமிங்கிலம், நண்டு, ஆமை, நீர்ப் பாம்பு—இவற்றைப் பற்றி நீ என்ன அறிந்துள்ளாய்?

5. மீன்களை எவ்வெவ்வகையால் பிடிப்பார்கள்?



21. சந்திரன்

1. நாம் பூமியில் வாழ்கிறோம். நாம் தலை நிமிர்ந்து பார்த்தால் வானம் தோன்றுகிறது. வானவெளியில் பகலில் சூரியனைக் காண்கின்றோம்; இரவில் சந்திரனைக் காண்கின்றோம். இருள் மிகுந்த நாளில் வானத்தில் நட்சத்திரங்கள் பலவற்றைக் காண்கின்றோம். நிலவு நாட்களில் அதிகமான நட்சத்திரங்கள் காணப்படுவதில்லை.

2. சந்திரன் ஒளியை நிலா என்றும் நிலவு என்றும் கூறுவர். சந்திரனுக்கு இயற்

கையாக ஒளி இல்லை. சூரியன் ஒளி சந்திரன் மேற்படச் சந்திரன் ஒளி வீசுகிறது. சந்திரன் பூமிக்கு அருகில் இருக்கிறது நட்சத்திரங்கள் சந்திரனைவிடப் பெரியவை. ஆயினும், அவை பூமிக்கு நெடுந்தூரத்திலிருப்பதால், அவற்றின் ஒளி குறைவாய் இருக்கிறது.

3. சந்திரன் பூமியைச் சுற்றி வரும் உபக்கிரகம். அதன் குறுக்களவு 2,160 மைல் என்பர். சந்திரன், பூமியிலிருந்து இரண்டு லக்ஷத்து நாற்பதினாயிரம் மைல் தூரத்தில் உள்ளது. சந்திரன் பூமியில் ஐம்பதில் ஒரு பங்கு. ஆறரைக் கோடி சந்திர மண்டலங்கள் சேர்ந்தால் சூரிய மண்டலத்தின் அளவிற்குச் சமமாகும். சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தூரம் ஒன்பது கோடி மைலுக்கு மேலாகும்.

4. பூமியில் மலைகளும் சமவெளிகளும் உள்ளதுபோலச் சந்திர மண்டலத்திலும் மலைகளும் சமவெளிகளும் உள்ளன. சந்திர மண்டலத்திலுள்ள மலைகள் இரண்டு மைல் உயரம் உள்ளன என்று கூறுவர். சந்திரனின் ஒளி குறைந்துள்ள பாகங்களைப் பெருவெளிகள் என்பர். அவற்றைக் களங்கம் என்றும் கூறுவர். அக்களங்கத்தைப் புலவர்கள் முயல்

என்றும், மான் என்றும், கிழவி நூற்கிருள் என்றும், கிழவி அப்பம் சுடுகிருள் என்றும் கூறுவர். இவையெல்லாம் கற்பனே. பிரகாசமான பாகங்கள் மலேகள்; மங்கலான பாகங்கள் பள்ளத்தாக்குகள் என்பர் வானநூல் அறிந்தோர். சந்திர மண்டலத்தில் ஏறக்குறைய பெரியனவும் சிறியனவுமாகிய மலேகளும் பள்ளத்தாக்குகளும் முப்பதிஞயிரம் உள்ளன. சந்திரனிடத்துள்ள மலேகள் தணிந்த எரி மலேகள்.

5. சந்திர மண்டலத்தில் காற்று இல்லே; தண்ணீரும் இல்லே. ஆதலால், மனிதர்களோ, விலங்கு பறவைகளோ, மரம் செடி கொடிகளோ இல்லே. பகற்பொழுதில் சந்திரனிடத்துத் தாங்க முடியாத வெப்பமும் இரவில் தாங்க முடியாத குளிர்ச்சியும் உள்ளனவாம். சந்திரனே அடுத்து ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நட்சத்திரம் தோன்றும். அவ்வாறு தோன்றும் நட்சத்திரங்கள் இருபத்தேழு. அவற்றைச் சந்திரனுக்கு மனேவியர் என்பர். சந்திரன் ஒளியைக் கண்டு ஆம்பல் மலரும்; தாமரை குவியும். ஆதலால், சந்திரனேக் குமுதத்தின் நண்பன் என்றும், தாமரையின் பகைவன் என்றும் கூறுவர். தண்ணிய நிலவிஞல் கடல் நீர் பொங்கும்; மக்கள் மனம் மகிழ்வார்

கள். நிலவு பயிர்களைச் செழித்து வளரும்படி செய்யும்.

6. சந்திரன் தன்னில் தானே சுழன்று கொண்டு, பூமியையும் சுற்றி வருகிறது. பூமியை ஒருமுறை சுற்றிவருவதற்கு $29\frac{1}{2}$ நாட்கள் ஆகும். சந்திரனும் சூரியனும் ஒரே இடத்தில் இருக்கும் நாளை **அமாவாசை** என்பர். அன்று சந்திரன் பூமிக்கும் சூரியனுக்கும் இடையே வருகிறது. அப்பொழுது சூரியன் ஒளி விழாத பாகமே நமக்குத் தெரிகிறது. அன்று சந்திரன் நமக்குத் தெரிவதில்லை. சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையே இருக்கும்பொழுது ஒளியுள்ள சந்திரனின் முழுப் பாகமும் தெரிகிறது. அதனைப் **பௌர்ணமி** என்கிறோம்.

7. அமாவாசை முதல் பௌர்ணமி வரையில் சந்திரனின் வெளிச்சமான பாகம் வளர்ந்துகொண்டே வருகிறது. அதனைப் பிறை என்கிறோம். அவ்வாறு வளரும் நாட்களை **வளர்பிறை** அல்லது **சுக்கில பட்சம்** என்கிறோம். பௌர்ணமி முதல் அமாவாசை வரை சந்திரன் வடிவம் குறைந்துகொண்டே வருகிறது. அதனைத் **தேய்பிறை** அல்லது **கிருஷ்ணபட்சம்** என்கிறோம். உண்மையில்

சந்திரனுக்கு வளர்ச்சியும் இல்லை, தேய்வும் இல்லை.

அருஞ்சொற்கள் :

தலை நிமிர்ந்து	வானவெளி	நட்சத்திரங்கள்
நிலவு	நெடுந்தூரம்	உபக்கிரகம்
மண்டலம்	சமவெளி	பெருவெளி
களங்கம்	பிரகாசம்	வானநூல்
வெப்பம்	குளிர்ச்சி	குமுதம்
அமாவாசை	பௌர்ணமி	வளர்ச்சி
தண்ணிய	கிருஷ்ணபக்ஷம்	சுக்கிலபக்ஷம்

கேள்விகள் :

1. இரவில் வானில் காண்பவை யாவை ?
2. பகலில் வானில் காண்பவை யாவை ?
3. பூமிக்கு மிக அருகில் உள்ளது எது ?
4. பூமிக்கு நெடுந்தொலைவில் உள்ளது எது ?
5. சந்திரனைப் பற்றி உனக்கு என்ன தெரியும் ?
6. சந்திரனுக்கு ஒளி எங்கிருந்து கிடைக்கிறது ?
7. சந்திரனுக்கு வளர்ச்சியும் தேய்வும் எப்படி உண்டாகின்றன ?
8. களங்கத்தை என்ன என்று கூறுவர் ?
9. வளர்பிறை தேய்பிறை என்பவை யாவை ? விளக்கு.
10. சந்திரன் ஒளிக்கு என்ன பெயர் ? அதன் பயன் என்ன ?

பயிற்சி :

1. தலை நிமிர்ந்து, வெப்பம், குளிர்ச்சி, நெடுந்தூரம், வளர்ச்சி, சமவெளி, பெருவெளி, தண்ணிய— இவற்றைத் தனித்தனி வாக்கியத்தில் அமைத்துக் காட்டு.

2. பூமியில் மலைகளும் சமவெளிகளும் உள்ளன. சந்திர மண்டலத்திலும் மலைகளும் சமவெளிகளும் உள்ளன.

(அ) இவ்விரண்டு வாக்கியங்களையும் சேர்த்து எழுது.

(ஆ) இவ்விரண்டு வாக்கியங்களுக்கும் இடையில் 'போல' என்றதை அமைத்து எழுது.

3.

இயற்கை	× செயற்கை	சுகம்	× ———
தூரம்	× சமீபம்	நெட்டை	× ———
இன்பம்	× ———	மேடு	× ———
லாபம்	× ———	அகலம்	× ———

22. ஒற்றுமையே உயிர் நிலை

ஒற்றுமை யாக உழைத்திடுவோம்—நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்
வெற்றுரை பேசித் திரியவேண்டா—இன்னும்
வீணைப் புராணம் விரிக்க வேண்டா. 1

சாதி இரண்டலால் வேறுளதோ?—ஔவைத்
தாயின் உரையும் மறந்தீரோ?
ஆதி இறைவன் வகுத்ததுவோ?—மக்கள்
ஆக்கிய கற்பனை தானிதுவோ? 2

வீட்டுக்குள் சண்டைகள் போடுவதேன்?—கூரை
வெந்து விழுவதும் கண்டிலிரோ?
நாட்டுக்கு நன்மையை நாடுபவர்—இந்த
நாடகம் ஆடல் நகைப்பலவோ? 3

மானமே வாழ்வின் உயிர்நிலையாம்—அதை
மாசுறச் செய்தல் கொடுங்கொலையாம்.
ஈனசா தியெனும் பேச்சினைப்போல்—நெஞ்சை
ஈர்ந்திடும் வாளொன்று வேறுளதோ? 4

மன்னுயிர்க் காக முயல்பவரே—இந்த
மாநிலத் தோங்கும் குலத்தினராம்;
தன்னுயிர் போற்றித் திரிபவரே—என்றும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தோரம்மா! 5

—கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

அருஞ்சொற்கள் :

உற்ற துணை	மறந்தீரோ	இறைவன்
வருத்துவதுவோ	கற்பனை	நாடுபவர்
நாடகம்	நகைப்பு	மாசுற
ஈர்ந்திடும்	வாள்	உயிர் நிலை

கேள்விகள் :

1. நாம் எவ்வாறு வாழ வேண்டும்?
2. எவற்றைச் செய்யலாகாது?
3. சாதிபற்றி ஔவைத் தாயின் உரை யாது?
4. சாதி யார் உண்டாக்கியது?
5. எது நகைப்பு?
6. வாழ்க்கையின் உயிர் நிலை யாது?
7. நெஞ்சினை ஈர்ந்திடும் வாள் எது?
8. ஓங்கு குலத்தினர் யார்?
9. தாழ்ந்த குலத்தினர் யார்?
10. இப்பாடல்களில் உள்ள விஷயங்களைத் தெளிவாக எழுது.

23. மழை

1. உலகத்தில் உள்ள உயிர்களுக்கு உணவும், நீரும், காற்றும் கட்டாயம் வேண்டும். ஆனாலும், உணவைவிட நீரும் காற்றும் மிக முக்கியமானவை. அவற்றுள் நீர் நமக்கு எங்ஙனம் கிடைக்கிறது என்பதை நாம் அறிய வேண்டும் அல்லவா! நீர் உலகில் கிடைப்பதற்குக் காரணம் மழைதான். மழை பெய்யாவிட்டால் நீர் கிடைப்பது அரிதாய்விடும் என்பதில் சந்தேகமில்லை.

2. சிறுவர்களே, மழை பெய்யும்போது நாம் வானத்தைப் பார்த்தால், அங்கே என்ன காண்கிறோம்? கறுத்த மேகம் தெரிகிறது அல்லவா! ஆகாயத்தில் மேகம் குவிந்திருந்தால், மழை வரும் என்று நாம் நிச்சயமாக நம்புகிறோம். ஆகையால், மழைக்குக் காரணம் மேகம் என்பது தெரிகிறது அல்லவா? மேகம் எப்படி உண்டாகிறது? அது எப்படி மழையாகப் பெய்கிறது என்பவற்றைக் கவனிப்போம்:

3. பூமியில் கடல், ஏரி, குளம், குட்டை, கிணறு, ஆறு எனப் பல நீர் நிலைகள் உண்டல்லவா? அவற்றில் உள்ள நீர் சூரிய வெப்பத்

தால் சூடடைகிறது. அப்போது அது ஆவியாக மாறும். அந்த ஆவி நீராவி எனப்படும். அதன் நிறம் வெண்மையானது. அது காற்றைவிடக் கனம் குறைந்தது. கனம் குறைந்த இலேசான பொருள் நீரில் மிதப்பது போலக் காற்றினும் இலேசான நீராவி காற்றில் மிதந்து, காற்றுப் போகும் திக்காகச் செல்லும். இப்படியே, காற்றில் மிதந்து செல்லும் நீராவியெல்லாம், ஏதோ ஓர் இடத்தில் ஒன்ருய்க் குவியும். அல்லது, போகும் வழியில் உள்ள உயரமான மலைகளால் தடுக்கப்பட்டு ஒன்று சேர்வதும் உண்டு.

4. குவிந்த நீராவியின்மீது சில சமயம் குளிர்ந்த காற்று வீசுவதும் உண்டு. அப்போது அது கருமை நிறமடையும். அதைத்தான் **மேகம்** என்கிறேம். மேகத்தை **மப்பு**, **புயல்** எனக் கூறுவதும் உண்டு. மேலும் மேலும் குளிர்காற்றுப் படும்போது மேகம் நீர் உருவம் அடைகிறது. நீர் காற்றைவிடக் கனமானது. ஆகையால், காற்றில் அது மிதப்பதில்லை. சிறு சிறு துளிகளாகப் பூமியில் சிதறி விழும். அப்படிச் சிதறுவதைத் தூறுகிறது என்கிறேம்.

5. நீராவி மேகமாகி, வானில் உலவும் போது ஒரு குவியலுடன் மற்றெரு குவியல்

எதிர் தாக்கினால் ஓசை உண்டாகும். அதை நாம் **இடி** என்கிறோம். தாக்கும்போது ஒளி தோன்றுவதும் உண்டு. அதை **மின்னல்** என்போம். காற்றும் மழையும் இடியும் மின்னலும் கலந்திருக்கும் போது மனிதர்கள் மனம் கலங்குவார்கள்.

6. இவ்வளவு பயங்கரமாயினும் மாரியில்லாவிட்டால் உலகத்தில் ஒன்றுமே இல்லை. பஞ்சம் ஒழியாது. ஏன் என்கிறீர்களா? மழை இல்லாவிட்டால் வெப்பம் தணியாது. மரம் செடி கொடிகள் வளரமாட்டா. மற்ற உயிர்ப் பிராணிகளுக்குக் குடிக்கவும், குளிக்கவும் நீர் கிடைக்காது. எல்லா நீர் நிலைகளும் காய்ந்து போகும். பூமியை உழுது பயிரிட முடியாது. பின்பு தானியம் ஏது? உணவு எப்படிக் கிடைக்கும்? உணவு கிடைக்கவில்லை என்றால், தருமம் தவம் முதலியவை நிலைக்குமா? இதனால் மழையின்றி உலகத்தில் ஏதுமில்லை என்பது தெரிகிறதல்லவா?

7. மழை நீர் உணவை விளைவிக்கிறது; தானே உணவாகவும் இருக்கிறது. மழை பெய்யாவிட்டால், உலகில் உள்ள எந்த உயிரும் பிழைக்க முடியாதென்று சொன்னோம் அல்லவா? அதுபோலவே அளவுக்கு மிஞ்சின

மழை பெய்தாலும் துன்பம் ஏற்படும். அதிக மழை பெய்தாலும் வெள்ளப் பெருக்காயிருக்கும். வீடுகளெல்லாம் இடிந்து விழுவதும் உண்டு. காடுகளிலும் மலைகளிலும் பதுங்கி உள்ள மிருகங்கள் இறந்துவிடும். மரங்களில் வாழும் பறவைகள் குளிர் தாங்காமல் சாகும். ஆடு மாடுகள் வெளியே வர முடியாமல் தவிக்கும். மனிதர்கள் போக்கு வரவு இன்றி வருந்துவார்கள். வெள்ளத்தால் பாதைகள் அழிவதும் உண்டு.

8. எதுவும் அளவுக்கு அதிகமாகக் கூடாது என்பது இதனல் தெரிகிறது அல்லவா ?

அளவுக்கு மிஞ்சினல் அமுதமும் விஷம்.

அருஞ்சொற்கள் :

எங்ஙனம்	புயல்	ஒளி	பெருக்கு
அரிது	துளிகள்	மின்னல்	இடிந்து
நிச்சயம்	சிதறி	கலங்குவார்கள்	சாகும்
வெப்பம்	தூறுகிறது	பயங்கரம்	தவிக்கும்
இலேசு	உலவும்	ஏதும்	போக்கு வரவு
தப்பாது	தாக்கினல்	மிஞ்சின	நீர் நிலை
தப்பு	இடி	வெள்ளம்	பாதை

பயிற்சி :

குவிந்திருந்தால், வெள்ளப் பெருக்கு-பிரித்தெழுது.

ஓசை உண்டாகும்—ஒரே மொழியால் கூறு.

இலேசு—எதிர் மொழி கூறு.

ஒளி, ஒலி—இவற்றின் வேறுபாடு என்ன?

தொடர்களை ஒழுங்கு படுத்து :—

1. உணவும் உயிர்களுக்கு நீரும் வேண்டும் காற்றும்.

2. சூரிய நீர் வெப்பத்தால் நீர் நிலையில் ஆவியாகும் உள்ள

3. மழை பஞ்சம் இல்லாவிட்டால் உண்டாகும்.

4. மரங்களில் சாகும் பறவைகள் குளிர் தாங்காமல் வாழும்.

கேள்விகள் :

1. உயிர்களுக்குக் கட்டாயமாக வேண்டியவை எவை?

2. எதை மேகம் என்று சொல்லுகிறோம்?

3. இடியும் மின்னலும் எப்படி உண்டாகின்றன?

இலக்கணம் :

நாம் மழையை விரும்புகிறோம் என்னும் தொடரில் நாம் எழுவாய்; விரும்புகிறோம் பயனிலை என்பது தெரியும் அல்லவா? இன்னும் பயனிலையை வைத்துக் கொண்டு 'எதை விரும்புகிறோம்?' என்று ஒரு கேள்வி கேட்டால், 'மழையை விரும்புகிறோம்' என்று விடை வரும். மழை செயப்படுபொருள் ஆகும்.

கீழ்க்காணும் தொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களை எடுத்து எழுது:—

மேகம் கருமை நிறத்தை அடையும்.


உழவன் பூமியை உழுவான்.

மழை நீர் உணவை விளைவிக்கிறது.

நாம் ஆற்று வெள்ளத்தைப் பார்த்தோம்.

'முருகன் நேற்று வந்தான்' என்பது முடிந்த தொடர். அதனால், இப்படிப்பட்ட தொடரின் முடிவில் முற்றுப் புள்ளி (.) வைத்து எழுத வேண்டும்.

24. கதைப்படம்—IV



படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்; எழுது.

25. சிவாஜி

1. பிஜப்பூர் என்பது ஒரு ராஜ்யம். அந்த ராஜ்யத்துச் சுல்தானிடம் ஒரு சேனைத் தலைவர் இருந்தார். அவருடைய பெயர் ஷாஜி என்பது. ஷாஜி மராட்டிய குலத்தைச் சேர்ந்தவர். அவர் ஜீஜா பாய் என்னும் பெண்ணை மணந்திருந்தார். ஜீஜாவின் வயிற்றில் இரு ஆண் பிள்ளைகள் பிறந்தார்கள்.

2. ஷாஜி ஜின்னார் கோட்டையில் வாழ்ந்திருந்தார். அவர் போரில் மிகவும் கெட்டிக்காரர். ஆகையால், அடிக்கடி படையைத் திரட்டிக்கொண்டு வெளியில் போய்விடுவார். அவ்விதம் அவர் பலமுறை பிஜப்பூர் அரசனுக்கும் ஆமதுநகர் மன்னனுக்கும் உதவி செய்திருக்கிறார். அவர்களிருவரும் ஷாஜியால் பல நன்மைகள் அடைந்தார்கள். அதன்பொருட்டு ஷாஜிக்குப் பூனாவும் அதைச் சூழ்ந்துள்ள ஊர்களும் இனாமாகக் கிடைத்தன; அவ்விதமே தஞ்சாவூரும் கிடைத்தது.

3. பூனாவில் ஜீஜாவும் இரு மைந்தர்களும் தங்கி வாழ்ந்தார்கள். அவர்களுக்குத் துணையாகத் தாதாஜி கொண்டதேவ் இருந்தார். அவர் ஷாஜிக்கு உயிர் போன்ற நண்பர்; அந்தண



குலத்தவர்; அறிவிலும் கல்வியிலும் சிறந்த
வர். அவர் ஷாஜியின் மக்களை வீரராக்க

வேண்டுமென்று அக்கறை கொண்டார்; ஆகையால் **இராமன், இலக்குமணன், அர்ச்சுனன், வீமன், அபிமன்னன்** முதலிய வீரர்களின் கதையைக் கூறினர்; வீரர்களுக்கு வேண்டிய குணங்களை விளக்கினர்; போருக்கு முக்கியமான தந்திரங்களைக் கற்பித்தார். இவைகளை ஷாஜியின் மக்கள் இருவரும் கேட்டறிந்தார்கள். அதனல், அவர்களில் **சிவாஜி** என்னும் மகனுக்கு அதிகத் திறமையும், உணர்ச்சியும் உதித்தன.

4. சிவாஜியின் வீர மனத்தையும், தேகதிடத்தையும் ஜீஜா பாய் கவனித்தாள்; அவற்றை மேலும் வளர்க்கத் தொடங்கினள். அவளும் இந்திய வீரர் பலருடைய கதைகளைச் சொன்னள். அப்போது சிவாஜியின் மனம் தவித்தது; ஊக்கம் வளர்ந்தது.

5. சிவாஜி இளமையிலேயே சிறந்த வீரராய்விட்டார்; போர் முறையில் பழகினர்; தந்தையாரைக்காட்டிலும் தந்திரசாலியானர். 'புலி வயிற்றில் பிறந்தது பூனையாகுமா?' சிவாஜிக்கு வயது பதினறு நிறைந்தது. அவர் தாமே ஓர் ராஜ்யம் ஏற்படுத்த நினைத்தார்; முகமதியர்களால் இந்தியர் படும் துன்பத்தை நினைத்து நினைத்துப் பதைத்தார். இந்துக்களைக்

காக்கக் கருதினர். அவர் எண்ணத்தை வளர்க்க ஒரு குருவும் வந்து சேர்ந்தார். அவர் பெயர் **சமர்த்த ராமதாஸ்** என்பது. அந்தக் குரு சிவாஜிக்குத் தகுந்த நெறிகளைப் போதித்தார். அதனல், சிவாஜிக்கு மிகவும் தைரியம் ஏற்பட்டது.

6. தைரியங்கொண்ட சிவாஜி பல வீரர்களைக் கூட்டினர். போர் முறைகளைப் போதித்தார்; விரைவிலேயே பெரும்படை திரட்டினர்; சண்டைக்குப் புறப்பட்டுவிட்டார். அங்கேயும், கொஞ்சம் கொஞ்சம் வெற்றி பெற்றூர். முடிவில் **பிஜப்பூர்** ராஜ்யத்திலும் கொஞ்சம் கைப்பற்றினர். அதனல் சுல்தானுக்கும் சிவாஜிக்கும் பகை ஏற்பட்டது. ஆனலும், சிவாஜி அஞ்சவில்லை. பின்பு இருவருக்கும் ஒற்றுமை உண்டாயிற்று.

7. இவ்வாறிருக்க, டில்லியில் மொகலாய சக்கரவர்த்தியாராய் அரசாண்ட ஔரங்கசீபு என்பவர் சிவாஜியின் வீரச் செயலைக் கேட்டுப் பொருமை கொண்டார். சிவாஜியைத் தாக்க முயன்றூர். இருவருக்கும் போர் நடந்தது. பின்பு சிவாஜி ஔரங்கசீபுவைக் காண டில்லிக்குச் சென்றூர். ஔரங்கசீபு வஞ்சகமாகச் சிவாஜியைச் சிறையில் அடைத்தார். ஆனலும்,

சிவாஜி மிகுந்த தந்திரமாக வெளியேறிவிட்டார். அதுமுதல் விடாமுயற்சியுடன் படைத்திரட்டி, மொகலாயருடன் போர் செய்து வெற்றியடைந்தார். பின்பு, சிவாஜி தாம் இளமையில் கொண்டிருந்த எண்ணத்தை நிறைவேற்ற முயற்சி செய்தார். தாமே ஒரு தனி ராஜ்யத்தை அமைக்கவேண்டும் என்று ஆரம்பித்தார். ஒரு பலமான கோட்டை கட்டினுர். அதன் பெயர் **ராஜகிரிக் கோட்டை** என்பதாகும். அப்போது அவர் முடி சூடியதோடு **'சத்திரபதி'** என்ற பட்டமும் தாங்கினுர். ஆதலால், அவர் பெயர் **சத்திரபதி சிவாஜி மஹாராஜா** என வழங்கியது.

8. இந்து மதத்துக்குச் சிவாஜி பல நன்மைகளைச் செய்தார்; ஆனுல், மற்ற மதத்தார் எவருக்கும் தீமை செய்யவில்லை. கருணையும், பத்தியும் சிவாஜியின் இரு கண்கள் போன்றவை. சிவாஜி **துக்காராம்** என்பவரோடு பழகினுர். இராமதாசும், துக்காராமும் சிவாஜியைக் குணத்தில் தங்கமாக்கிவிட்டார்கள். இப்படிப்பட்ட சிவாஜியின் ஆட்சியில் குடிகளுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டிருக்குமா? இல்லவே இல்லை. கஷ்டமின்றிக் குடிகள் வாழும் நாட்டில் மன்னனுக்குத்தான் வருத்தம் ஏது? இல்லையன்றே? சிவாஜியின் ஆயுள்

முழுவதும் இனிமையாகவே கழிந்தது என்னலாம். இடையிடையே, சில சில கஷ்டங்கள் நேர்ந்தாலும், சிவாஜி அவற்றிற்காக வருந்தவேயில்லை. வீர வாழ்வு எதையும் நன்மையாகவே கருதும். இதற்கு நமது சிவாஜியின் வாழ்க்கையே உதாரணமாகும்.

அருஞ்சொற்கள் :

திரட்டி	**விளக்கம்**	**சமாதானம்**
சூழ்ந்துள்ள	**முகம்மதியர்**	**சத்திரபதி**
இனம்	**நெறி**	**போதித்தார்**

பயிற்சி :

அவ்விதம், தன்னினத்தவர்—பிரித்து எழுது.
குலத்தைச் சேர்ந்தவர்—ஒரு மொழி கூறு.
விளக்குவார்—இரு மொழி கூறு.
ஒற்றுமை, களிக்கும், துன்பம்—எதிர்மொழி கூறு.

தொடர்களை ஒழுங்குபடுத்து :—

1. ஒரு அந்த எண்ணத்தை குருவும் வளர்க்க சேர்ந்தார் வந்து.

2. பல கூட்டினார் வீரர்களை சிவாஜி தைரியங் கொண்ட.

3. வெளியேறினார் சிவாஜி சிறையிலிருந்து தந்திரமாக.

4. கழிந்தது முழுதும் இனிமையாகவே ஆயுள் சிவாஜியின்.

கேள்விகள் :

1. ஷாஜி என்பவர் யார்?

2. ஷாஜிக்குப் பூனு எப்படிக் கிடைத்தது?

3. சிவாஜி வீரரானது எப்படி?

4. சிவாஜி கட்டிய கோட்டை எது? சிவாஜி பெற்ற பட்டம் எது?

இலக்கணம் :

ஐயோ! அடித்தான்!


ஆஹா! மிகவும் அழகு!

இப்படித் துக்கத்தையும் புதுமையையும் குறிக்கும் சொல்லின் அருகில் **வியப்புக் குறி** (!) இட்டு எழுத வேண்டும்.

குறிகள் இடு:—

நான் நேற்று வந்தேன்
அம்மா இது ஒரு பெரிய வீடு
நீ ஏன் இப்படிச் சிரிக்கிறாய்
நானும் உன் நண்பன்தான்
உனக்குப் படிக்கத் தெரியுமா
அடடா நீதான் வீரனோ
சீ சீ ஓடிப்போ

26. ஆறு



கல்லும் மலையும் குதித்து
வந்தேன்;—பெருங்
காடும் செடியும் கடந்து
வந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி—எங்கும்
இறங்கித் தவழ்ந்து நான்
தவழ்ந்து வந்தேன். 1

கட்டும் அணையேறிச் சாடி
வந்தேன்;—அதன்
கண்ணறை தோறும் நுழைந்து
வந்தேன்;
திட்டுத் திடர்களும் சுற்றி
வந்தேன்;—மடைச்
சிப்புகள் மோதித் திறந்து
வந்தேன். 2

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன்:—அதில்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன்;
ஆயும் மலர்ப் பொழில் செய்துவந்தேன்;—அங்கென்
ஆசைதீ ரவிளை யாடிவந்தேன். 3

ஏறாத மேடுகள் ஏறிவந்தேன்;—பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்;—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். 4

ஆயிரங் காலால் நடந்துவந்தேன்;
அத்தனை யுஞ்சுற்றிப் பார்த்துவந்தேன்;
நேயமு றப்புன்செய்க் காட்டிலும் அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன். 5

—திரு. கவிமணி. தேசிகவிநாயகம் பிள்ளை

அருஞ்சொற்கள் :

குதித்து	**அணை**	**சீப்பு**	**நேயம்**
கடந்து	**சாடி**	**நிலத்தழல்**	**நிரப்பி**
சமவெளி	**கண்ணறை**	**மலர்ப்பொழில்**	**நெடுக**
தவழ்ந்து	**திட்டுத்திடர்**	**ஊற்று**	**ஓடை**

கேள்விகள் :

1. ஆறு எப்படி வருகிறதாகக் கூறுகிறது?

2. அணைக்கட்டு என்பது என்ன? அதன் பயன் என்ன?

3. உனக்குத் தெரிந்த அணைக்கட்டு ஒன்று சொல்.


4. ஆற்றினால் உண்டாகும் பயன்களை எழுது.

5. 'ஆயிரம் காலால் நடந்து வந்தேன்'—அர்த்தம் என்ன?

பயிற்சி :

1. ஆறு என்பதைப்பற்றிப் பத்து வரிகள் எழுது.

2. ஆற்றைப்பற்றிய பழமொழி ஒன்று எழுது.



27. மாமல்லபுரம்

1. தமிழகத்தில் மூன்று பெரிய நாடுகள் இருந்தன. அவை சேரநாடு, சோழநாடு, பாண்டி நாடு என்பன. அவைகளுள் சோழ நாட்டின் ஒரு பகுதியாய் விளங்கியது தொண்டை நாடு. தொண்டை நாடு சில காலம் சோழராட்சிக்குட்பட்டும், சில காலம் தனிமையான ஆட்சி பெற்றும் விளங்கியது. அதற்குத் தலைநகர் காஞ்சிபுரம்.

2. ஒரு சமயம் தொண்டை நாட்டைப் பல்லவ மன்னர் கைப்பற்றி ஆண்டனர். அக் காலத்தில் சோழ நாடும் பல்லவர்களால் ஆளப்பட்டமையால், **பல்லவ நாடு** எனப்பட்டது. பல்லவ நாட்டிற்கு உள்நாட்டுத் தலை

நகர் காஞ்சிபுரம்; கடற்கரைத் தலை நகர் மாமல்லபுரம். மாமல்லபுரம் துறைமுகமாயும் விளங்கிற்று.

3. பல்லவ மன்னர்களில் சிறந்து விளங்கியோர் மகேந்திரவர்மரும் அவர் மைந்தர் நரசிம்மரும் ஆவர். இருவரும் போர்கள் பல புரிந்து வெற்றி பெற்றனர். இருவரும் கட்டடப் பிரியர்கள்; கல்வி வளம் படைத்தவர்கள். நரசிம்மவர்மருக்குப் பல பட்டப் பெயர்கள் உண்டு. அவற்றுள் ஒன்று **மாமல்லர்** என்பது. அவர் பெயரால் **மாமல்லபுரம்** என்ற பெயர் அத்துறைமுகப்பட்டினத்திற்கு ஏற்பட்டது. அதற்கு முன் அதற்குத் **தலசயனம்** என்பது பெயராகும். மாமல்லபுரம் என்பது **மகாபலிபுரம்** என்று இக்காலத்தில் வழங்கி வருகிறது. முன்பு **கடல் மல்லை** என்ற பெயரும் அதற்கு உண்டு.

4. மாமல்லபுரத்தின் சிற்பங்கள் மிகச் சிறந்தன. மகேந்திரவர்மரும் நரசிம்மவர்மரும் மாமல்லபுரச் சிற்பங்களை உண்டாக்கினர். சற்றேறக்குறைய ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு செதுக்கப்பட்ட அச்சிற்பங்கள் இன்றும் அழகு குன்றாமல் இருக்கின்றன.

5. மாமல்லபுரச் சிற்பங்கள் மூன்று வகைப்படும். அவைகளுள் பாறைகளின் மீது செதுக்கப்பட்ட சிற்பங்கள் ஒருவகை. பாறைகளைக் குடைந்து செய்யப்பட்ட மண்டபங்கள் ஒருவகை. ஒரே பாறையில் தேர் போலக் குடைந்து செய்யப்பட்டவை மற்றொரு வகை. அவை அன்றிக் கடற்கரையில் அமைந்த கோயில் தனி வகை. அருச்சுனன் தவம் என்பது பாறையில் செதுக்கப்பட்ட சித்திரங்களுள் மிகச் சிறந்தது. அதில் யானை, குரங்கு, மான் முதலிய விலங்கு உருவங்களைக் கண்டு களிக்கலாம்.

6. பாறைகளைக் குடைந்து செய்யப்பட்ட மண்டபங்களில் **மகிஷாசுர மர்த்தனி** சிற்பத்தைக் கொண்ட மண்டபம் மிகச் சிறந்தது. அங்கு **வராக மூர்த்தி**யின் சிற்பம் மிக அழகாகக் காணப்படுகிறது.

7. ஒரே பாறையில் தேர் போன்று குடைந்து செய்யப்பட்ட கோயில்கள் ஐந்து இருத்தலின், **பாண்டவ இரதங்கள்** என்று அவற்றை வழங்குகின்றனர். பாண்டவர்களுக்கும் அந்த இரதங்களுக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. அந்த ஐந்து இரதங்களுள் பெரியது **தருமர் இரதம்**. அது இரண்டு அடுக்கு

மாடி உள்ளது. அதனுள் புராண சம்பந்த மான பல சிற்பங்கள் காணப்படுகின்றன. அந்த இரதங்களை யடுத்து ஒரு யானையின் உரு வமும், படுத்திருக்கும் காளையின் உருவமும் உள்ளன.

8. கடற்கரையில் ஒரு கோயில் உள்ளது. அதன் கீழ்ப்புறம் சிவலிங்கம் உள்ளது; மேற் புறத்தில் திருமால் படுத்துக்கொண்டுள்ளார். மாமல்லபுரம் முன்பு துறைமுகப்பட்டினமாய் இருந்ததால், கலங்கரை விளக்கம் ஒன்றிருந் தது. அத்தலத்தில் **பூதத்தாழ்வார்** என்ற பெரியார் பிறந்தார். மாமல்லபுரம் சென் னைக்கு முப்பத்திரண்டு மைல் தூரத்தில் உள் ளது. அதன் சிற்ப அழகுகளை நேரில் கண்டு களித்தல் வேண்டும்.

அருஞ்சொற்கள் :

சோழராட்சி	**சிற்பங்கள்**	**இரதங்கள்**
தலை நகர்	**சற்றேறக்குறைய**	**புராணம்**
உள் நாடு	**செதுக்கப்பட்ட**	**சம்பந்தம்**
கடற்கரை	**குடைந்து**	**கலங்கரை விளக்கம்**

கேள்விகள் :

1. காஞ்சிபுரம் எதற்குத் தலை நகர்?
2. பல்லவநாடு என்பது எது?
3. மாமல்லபுரம் என்று பெயர் வரக் காரணம் என்ன?

4. அதற்கு மற்ருெரு பெயர் யாது?

5. மாமல்லபுரம் என்பது இப்பொழுது எவ்வாறு வழங்கப்படுகிறது?

6. மாமல்லபுரச் சிற்பங்கள் எத்தனை ஆண்டு களுக்கு முன் உண்டாக்கப்பட்டன?

7. எத்தனை வகைச் சிற்பங்கள் அங்குள்ளன?

8. மாமல்லபுரச் சிற்பங்களைப்பற்றி எழுது.

பயிற்சி:

1. கலங்கரை விளக்கம்—இதற்கு வேறு பெயர் கூறு. இதன் உபயோகம் என்ன?

2. மாமல்லபுரத்தில் பிறந்த ஆழ்வார் யார்?

3. தலைநகர், செதுக்கப்பட்ட, சற்றேறக்குறைய—இவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுது.

28. கப்பல் ஓட்டிய தமிழர்

1. நமது நாட்டில் நம் முன்னோர்கள் வர்த்தகம் செய்வதில் புகழ் பெற்றவர்கள். முற்காலத்தில் அவர்கள் மரக்கலங்களால் கடல் கடந்து அயல் நாடுகளுக்குச் சென்று சிறந்த விதமாக வாணிபம் செய்து வந்தார்கள். நம்முடைய கப்பல்கள் காவிரிப்பூம்பட்டினம், காயற்பட்டினம், தொண்டி முதலிய பெயர் பெற்ற துறைமுகங்களில் தங்கியிருந்தன.

2. ஆனால், பிற்காலத்தில் அன்னியர் ஆட்சியில் கடல் வர்த்தகம் முழுவதும் அன்னியரே நடத்தி வந்தார்கள். இப்பொழுதும் கடற்பயணம் செய்வதென்றால், பெரும்பாலும் அன்னியக் கலங்களிலேயே செல்லவேண்டியிருக்கின்றது. இந்தக் குறையை நீக்குவதற்கும், தமிழர்களாகிய நமது ஆற்றலை மறுபடியும் நிலைநாட்டுவதற்கும், நமது நாட்டில் பெரியார் ஒருவர் தோன்றினார். அவரே **வ. உ. சிதம்பரம் பிள்ளை** அவர்கள். அவர் முதல் முதலாக இந்திய நாட்டுக் கப்பலை ஓட்டிய பெருமையைப் பெற்றவர். எனவே, **கப்பலோட்டிய தமிழர்** என்று அவர் பாராட்டப் படுகிறார்.

3. பிள்ளையவர்கள், திருநெல்வேலிக்கு அருகில் உள்ள ஒட்டப்பிடாரம் என்னும் சிறிய ஊரில் சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்னர்ப் பிறந்தார். இளமையிலேயே கல்வி கற்பதில் ஊக்கம் உடையவரார்ய், விரைவில் வழக்கறிஞர் பரீட்சையில் தேறினர். பின்னர், அவர் தூத்துக்குடியில் வழக்கறிஞராய்த் தொழில் நடத்தி வந்தார்.



வ. உ. சிதம்பரம் பிள்ளை

4. இளம்பருவமுதலாகவே பிள்ளையவர்கள் சாதி மத வேற்றுமை இல்லாமல், எல்லாரிடத்திலும் அன்பு பாராட்டி வந்தார். ஹரிஜனரை வித்தியாசமில்லாமல் தம்முடன் இருக்கச் செய்தார்; அதனல் மற்றவர்கள் குறை சொன்னலும் பின் வாங்குவதில்லை. தொழிலாளர்கள் படும் கஷ்டத்துக்காக வருந்

தினர்; அவர்களுக்கு உதவி செய்யப் போய்ச் சிறையிலும் அடைக்கப்பட்டார்.

5. ஆங்கிலேயருடைய ஆட்சியில், கப்பல் வாணிபம் முழுவதும் அவர்களே நடத்தி வந்தார்கள். அதை அறிந்த பிள்ளை, இந்தியர்களாகிய நாமும் முற்காலத்தைப்போலக் கப்பல் ஓட்டி வர்த்தகம் செய்ய வேண்டும் என்று விரும்பினர்; '**திரை கடல் ஓடியும் திரவியம் தேடு,**' என்ற ஔவையார் மொழியை எடுத்துக் கூறி மக்களுக்கு ஊக்கம் உண்டாக்கினர். பல பணக்காரர்கள் உதவியினல் **சுதேசிக் கப்பல் கம்பெனி**யை ஏற்படுத்தினர். கப்பல் வாங்குவதற்கு அவரே பம்பாய்க்குச் சென்றார். "கப்பல் இல்லாமல் ஊருக்குத் திரும்பி வரமாட்டேன்!" என்று சபதம் செய்து கொண்டார். அது போலவே, அவர் கப்பலுடன் தூத்துக்குடித் துறைமுகத்தில் வந்து இறங்கினர். அப்பொழுது அதைக் கண்ட மக்களின் மகிழ்ச்சிக்கு அளவில்லை.

6. ஆங்கிலேயரது கப்பல்களுக்குப் போட்டியாகச் சுதேசிக் கப்பல்கள் ஓடின. அதனல், ஆங்கிலேயர்களுக்கு மிகுந்த கஷ்டம் உண்டாயிற்று. ஒரு சமயம் இரண்டு கம்பெனிகளும் பிரயாணிகளை இலவசமாகவும்

ஏற்றிச் சென்றனவாம்! எவ்விதமாவது சிதம்பரம் பிள்ளையை அடக்க வேண்டும் என்று ஆங்கிலேயர்கள் விரும்பினார்கள்.

7. அச்சமயம், பிள்ளையவர்கள் காங்கிரசில் சேர்ந்து, பொதுக் கூட்டங்களில் பேசி வந்தார். ஜனங்களுக்கு அவர் பிரசங்கத்தைக் கேட்பதில் விருப்பம் அதிகம். ஒரு நாள் அவரைக் கூட்டத்தில் பேசக்கூடாது என்று அரசாங்கத்தார் தடை செய்தனர். ஆனாலும், அவர் மீறிப் பேசினார்; இராஜத் துரோகம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறை செய்யப்பட்டார். சிறையில் பிள்ளையவர்கள் பட்ட கஷ்டம் சொல்லி முடியாது. பிறகு, அவர் அப்பீலில் விடுதலையடைந்தார்.

8. அவர் பல காலம் சென்னையைச் சார்ந்த பிரம்பூரில் குடியிருந்து, பிறகு தூத்துக்குடியில் 1936-ஆம் ஆண்டில் உலகைத் துறந்தார். அவர் இறந்தது கேட்டு இந்தியா முழுவதும் துக்கம் அடைந்தது.

9. சிதம்பரம் பிள்ளை தீவிரமான கொள்கையுடையவர் என்றாலும், யாரிடத்திலும் இரக்கம் உடையவர். தமது தொழிலில் உண்மை அல்லாத வழக்கை ஏற்றுக்கொள்ள மாட்டார். அவர் மிகுந்த தமிழ்ப் பற்றுடை

யவர்; தொல்காப்பியம், திருக்குறள் என்னும் தமிழ் நூல்களை நன்கு கற்றுணர்ந்தவர்; அந்த நூல்களைத் திருத்தமாகவும் பதிப்பித்திருக்கிறார்; சிறையில் இருந்தபொழுது 'மெய்யறம்', 'மெய்யறிவு' என்ற சிறந்த செய்யுள் நூல்களையும் இயற்றினார்.

10. தேச சேவையிலும் மொழிப்பற்றிலும் சிறந்து விளங்கிய பிள்ளையவர்களின் குணங்களை நாம் அனைவரும் பின்பற்றுவோமாக.

அருஞ்சொற்கள் :

மரக்கலம்	**ஆற்றல்**	**பரீட்சை**	**பொதுக்கூட்டம்**
கப்பல்	**இலவசம்**	**ஹரிஜனர்**	**சாட்டப்பட்டு**
துறைமுகம்	**வழக்கறிஞர்**	**இராஜத்துரோகம்**	**பின் பற்று**

பயிற்சி :

பற்றுடையவர், கற்றுணர்ந்து,—பிரித்தெழுது.
திரவியம் தேடு, உதவி செய்—ஒரு சொல்லாக்கு.
புகழ், மொழி, நாவாய்—பொருள் கூறு.

கேள்விகள் :

1. தமிழ் நாட்டின் சிறந்த துறைமுகங்கள் எவை?
2. தமிழர்கள் எதில் சிறந்திருந்தார்கள்?
3. சிதம்பரம் பிள்ளை என்ன தொழில் செய்திருந்தார்?
4. அவர் எதற்காகச் சிறைப்பட்டார்?

5. சுதேசிக் கம்பெனியால் யார் நஷ்டமடைந்தார்கள்? ஏன்?

6. பிள்ளையின் மொழிப்பற்றுக்கு உதாரணம் கூறு.

தொடர்களை ஒழுங்குபடுத்து :—

1. நான் ஊர் இல்லாமல் திரும்பி கப்பல் வர மாட்டேன்

2. கடல் அன்னிய பயணம் கப்பலில் செய்ய வேண்டியிருக்கிறது

3. கேட்பதில் பிரசங்கம் அவர் விருப்பம் மக்களுக்கு

4. பிள்ளையை விரும்பினர்கள் அடக்க ஆங்கிலேயர்

இலக்கணம் :

ஓடினன், ஓட்டினன்—இவற்றில் ஓடினன் என்பது தானே ஓடுவதையும், ஓட்டினன் என்பது பிறரை ஓடச் செய்வதையும் தெரிவிக்கின்றன. இவற்றைப் போலப் படித்தான் என்பது தானே படிப்பதும், படிப்பித்தான் என்பது மாணவரைப் படிக்கச் செய்வதும் ஆகும். இவற்றில் **ஓடினன், படித்தான்** என்பன தன்வினை; **ஓட்டினன், படிப்பித்தான்** என்பன பிறவினையாகும்.

இப்பாடத்திலிருந்து தன்வினை பிறவினைக்கு மும்மூன்று உதாரணங்கள் காட்டு.

செய்யுட்பாடம்

1. கடவுள் வணக்கம்

1. வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

2. ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை—தூய
உருப்பளிங்கு போல்வாள்என் உள்ளத்தி னுள்ளே
இருப்பளிங்கு வாரா திடர்.

3. பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

2. நறுந்தொகை

ஆசிரியன்

1. எழுத்தறி வித்தவன் இறைவ னாகும்.

அழகு

2. கல்விக் கழகு கசடற மொழிதல்.
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
4. வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும்.
5. மன்னர்க் கழகு செங்கோன் முறைமை.
6. வணிகர்க் கழகு வள்பொருள் ஈட்டல்.
7. உழவர்க் கழகேர் உழுதூண் விரும்பல்.

8. மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.
9. தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை.
10. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
11. அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
12. வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.

கல்வி

13. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.
14. கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.
15. நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயின் கீழிருப் பவனே.
16. எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்.
17. அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்

செல்வம்

18. குடைநிழலிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும் நண்ணுவர்.
19. சிறப்பும் செல்வமும் பெருமையு முடையோர்
அறக்கூழ்ச் சாலை யடையினும் அடைவர்.
20. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்.
21. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்.
அன்றைப் பகலே அழியினும் அழிவர்.

போதலும் வருதலும்

22. துணையோ டல்லது நெடுவழி போகேல்.
23. புணைமீ தல்லது நெடும்புன லேகேல்.
24. வழியே ஏகுக, வழியே மீளுக.

3. வாக்குண்டாம்

1. நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

2. நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்லில் எழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர்.

3. நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார்சொல் கேட்ப துவும்நன்றே;—நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.

4. கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள்;—சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம்.

5. மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்;—மன்னற்குத்
தன்தேயம் அல்லால் சிறப்பில்லை; கற்றோற்குச்
சென்றவிட மெல்லாம் சிறப்பு.

4. நல்வழி

1. ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே?—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

2. ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்;—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து.

3. ஆன முதலின் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.

4. நற்றா மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர்;—கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர்; முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்.

5. நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்;
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு;—நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர்; கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்.

5. தனிப்பாடல்கள்

பழக்கம்

1. சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம்;
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்;—நித்தம்
நடையும் நடைப்பழக்கம்; நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம்.

நன்று

1. அதிகாலை யில்ல முந்து ஆண்டவனைத் துதித்து
மதிமிகுந் தந்தை தாயர் மலரடி போற்றி செய்து
நதிகுளம் நோக்கிச் சென்று நாள்தோறும் கடன்மு
டித்து
விதியுடன் பள்ளிவேலை விருப்பமாய் முடித்தல் நன்றே.
2. பாட்டினைப் பாடஞ் செய்து பணிவுடன் கணக்கும்
தீர்த்து
நாட்டமாய்ச் சட்டந் தீட்டி நல்லவா சகம்ப டித்து
வேட்டியைக் கசக்கிப் போட்டு வியர்வைபோகக்கு
ளித்துத்
தீட்டியே உண்டு டுத்துத் தினம்பள்ளி ஏகல் நன்றே.
3. பள்ளியில் நல்ல பாலர் பழக்கமே செய்து பாடம்
கொள்ளுதல் குருமார் முன்னே குற்றமொன் றுஞ்செய்
யாமை
எள்ளுதலொழிதல் மாலை இல்லினை யடைதல் பின்னர்
உள்ளமே மகிழ ஆடல் ஊக்கமாய்ப் படித்தல் நன்றே.

இரு சொல் அலங்காரம்

1. எருக்கிலை பழுப்பதேன் ?
எருமைக்கன்று சாவதேன் ? = பாலின்றி
2. ஆலிலை பழுப்பதேன் ?
இராவழி நடப்பதேன் ? = பறிப்பாரின்றி
3. காவன்னு கோவன்னு ஆவதேன் ?
காளை மாடு பாய்வதேன் ? = கொம்பால்
4. மேதினி எங்கும் செழிப்பதேன் ?
மெய்யெல்லாம் கொப்பளிப்பதேன்? = மாரியால்

செய்யுட்பாடக் குறிப்புரை

1. கடவுள் வணக்கம்

1. வாக்கு - சொல், மாமலராள் - சிறந்த தாமரை மலரில் வசிக்கும் இலக்குமி, நோக்கு - பார்வை, நுடங்காது - அழியாது, துப்பு ஆர் - வலிமை நிறைந்த, சிவந்த, திருமேனி - அழகிய உடல், தும்பிக்கையான் - துதிக்கையை உடைய விநாயகன், சார்வார் - அடைவார்.

2. ஆய - பொருந்திய, கலைகள் - சாத்திரங்கள், ஏய - பொருந்த, தூய - பரிசுத்தமான, உரு பளிங்கு போல்வாள் - வடிவம் (கண்ணாடி) படிகம் போன்ற வெண்மையுடையவள், இடர் - துன்பம், உள்ளம் - மனம்.

3. கோலம் - அழகு, துங்கம் - பரிசுத்தம், கரிமுகம் - யானை முகம், தூமணி - பரிசுத்தமான ரத்தினம் போன்ற விநாயகன், சங்கத்தமிழ் மூன்று - இயல், இசை, நாடகம்.

2. நறுந்தொகை

1. இறைவன் - கடவுள்.

2. கசடு அற - குற்றம் நீங்க.

3. செழுங்கிளை - நிறைந்த சுற்றம்.

4. வேதியர் - பிராமணர், ஒழுக்கம் - நல்நடத்தை.

5. செங்கோல் முறைமை - நீதியோடு ஆட்சி புரிதல்.

6. ஈட்டல் - சம்பாதித்தல்.

7. ஊண் - உணவு.

9. தந்திரி - சேனைத் தலைவன், தறுகண் - அஞ்சாமை, ஆண்மை - வீரம்.

10. விருந்து - புதியவராய் வந்தோர்.

12. வறிஞர் - தரித்திரர், வறுமை - தரித்திரம்.

13. கற்கை - படித்தல், பிச்சை புகினும் - பிச்சை எடுத்தாலும், குலநலம் - குலச்சிறப்பு, பதர் - அரிசியான உள்ளீடு இல்லாத நெல், கருக்காய்.

15. நாற்பாற்குலம் - பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் நான்கு பகுதிப்பட்ட குலங்கள்.

17. விரும்பும் - விரும்புவன்.

18. குடை - அரசர்க்குரிய சந்திரவட்டக் குடை, குஞ்சரம் - யானை, ஊர்ந்தோர் - ஏறிச்சென்றோர், நடை மெலிந்து - நடத்தலால் வருந்தி, நண்ணினும் - சேர்ந்தாலும்.

19. அறக்கூழ்ச்சாலை - தருமத்திற்குக் கஞ்சி வார்க்கும் சத்திரம்.

20. அறத்து இடு பிச்சை - தருமத்திற்காக இடும் பிச்சை, கூவி - கதறி, இரப்போர் - யாசிப்போர்.

21. குன்றத்தனை - மலையளவு, இருநிதி - பெருஞ்செல்வம், படைத்தோர் - அடையப் பெற்றவர்.

22. நெடுவழி-நீண்ட தூரம், போகேல்-போகாதே.

23. புணை - தெப்பம், நெடும்புனல் - நீண்ட ஆழமான நீர், ஏகேல் - போகாதே.

24. ஏகுக - செல்க, மீளுக - திரும்பி வருக.

3. வாக்குண்டாம்

1. நன்றி - உபகாரம், செய்தக்கால் - செய்தால், தருங்கொல் - பிரதி உபகாரம் செய்வானோ, தளரா - சோர்வு அடையாத, தெங்கு - தென்னை.

2. அல்லார் - நல்லவரல்லாத தீயவர், ஈரம்-அன்பு, ஈந்த - கொடுத்த, நேர் - ஒப்பு.

3. நலமிக்க - நற்குணங்கள் மிகுந்த, இணங்கி - சேர்ந்து.

4. கவை - கிளை, காட்டகத்தே - காட்டில், நீட்டோலை - நீட்டிய ஓலை, வாசியா - வாசிக்காமல், குறிப்பு - அதில் எழுதப்பட்டுள்ளதை.

5. மாசு அற - குற்றம் நீங்க, சீர்தூக்கின் - பெருமைகளை ஆய்ந்து ஒப்பிட்டுப் பார்த்தால், மன்னனில் - அரசனைப்போல, தேயம் - தேசம்.

4. நல்வழி

1. அரசு அறிய - அரசர்களும் அறியும்படியான செல்வாக்குடன், வீற்றிருந்த - சிறக்க வாழ்ந்திருந்த, வாழ்வு - வாழ்க்கை, விழும் - வீழ்ந்துவிடும் (கண்டீர் - அசை), பழுது - குற்றம், பணி - வேலை.

2. ஆற்றுப்பெருக்கு - ஆற்று வெள்ளம், அடிசுடும் - பாதம் சுடும், அ நாள் - வறண்ட அந்த நாள், ஊற்றுப்பெருக்கு - ஊற்றிலிருந்து பெருகும் நீர், உலகு - உலகத்தில் உள்ள உயிர்களை, ஊட்டும் - உண்பிக்கும், ஏற்றவர் - யாசித்தவர், நல்கூர்ந்தார் - தரித்திரர், இசைந்து - மனம் பொருந்தி.

3. ஆன முதலின் - உண்டான முதற்பொருளைக் காட்டிலும், மதி - புத்தி, போன திசை - சென்ற திக்குகளிலுள்ள நாடுகளில், கள்ளனாய் - திருடனாய், ஏழ்பிறப்பும் - ஏழு பிறவியிலும், தீயனாய் - கெட்டவனாய், நல்லார்க்கும் - வீட்டிலுள்ள மனைவி தாயார் போன்ற

பெண்களுக்கும், பொல்லனும் - வெறுப்புக்கு உரியவன் ஆவன், நாடு - நீ ஆராய்ந்துகொள்.

4. நல்தாமரை கயத்தில் - நல்ல தாமரை மலர்கள் மலர்துன்ள குளத்தில், அன்னம் - அன்னப்பறவை, காமுறுவர் - விரும்புவர், கற்பு இலா - கல்வி கற்றில்லாத, மூர்க்கரை - கோபிகளை, முகப்பர் - விரும்புவர், முது காடு - சுடுகாடு, உகக்கும் - விரும்பும்.

5. நஞ்சு உடைமை - விஷம் தன்னிடம் இருத்தலை, நாகம் - பாம்பு, கரந்து உறையும் - மறைந்து வசிக்கும், அஞ்சா - பயப்படாமல், புறம் கிடக்கும் - வெளியே கிடக்கும், நெஞ்சில் - மனத்தில், கரவு - வஞ்சகம், கரப்பர் - மறைத்துக்கொள்வர், கரவு இலா - வஞ்சகமில்லாத, கரவார் - மறைத்துக்கொள்ளமாட்டார், நெஞ்சத்தவர் - மனத்தையுடையவர்.

5. தனிப்பாடல்கள்

பழக்கம் :

நித்தம் - தினமும், தயை - இரக்கம், பிறவிக்குணம் - பிறப்பிலேயே அமைந்த குணம்.

நன்று :

மதி - அறிவு, மலரடி - பூப்போன்ற பாதங்கள், நாட்டம் - விருப்பம், குருமார் - உபாத்தியாயர்கள், எள்ளுதல் - இகழ்தல், இல் - வீடு, உள்ளம் - மனம், ஆடல் - விளையாடுதல்.

DEIVA TAMIL VACHAKAM

STANDARD IV

BY :

Vidwan **I. NATESA PILLAI**

Publishers :

V. C. VENKATESAN & CO.,

MOOR-MARKET : : MADRAS—3

Price As. 8